இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

ஆகஸ்ட் 2025 August | இதழ் 415 Issue

கனடிய மூத்த தமிழ் இதழ்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991

Premier Canadian Tamil Journal

விரிவுபடுத்திய சேவையுடன் புதிய இடத்தில்

பிறந்தநாள் நினைவாக சமூகப் பங்களிப்பு

நல்லூர்க் கந்தன் பெருந்திருவிழா

மீண்டும் 16



பாரிசில் ‘தேசத்தின் குரல்’ சிலை

கனடிய அரசியலில் நளபாகம்

ரூடோ: ‘கொத்து ரொட்டி’

கார்னி: ‘பான் கேக்’

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

35வது ஆண்டில் 35th Year

Growing with the Community ESTD-1991

ஆசிரியரிடமிருந்து... *From the Editor*

மீண்டும் பதினாறு

பதினாறு வயது என்பது சர்வதேச அரசியலில் மீண்டும் பேசுபொருளா - கியுள்ளது. கனடாவையும் இது விட்டு வைக்கவில்லை.

இளையோர்களையும் ஜனநாயகத்தில் முழுமையாக ஈடுபடுத்த வேண்டு - மெனில் தேர்தல் வாக்குரிமையை பதினாறு வயதாகக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கை முன்னரிலும் பார்க்க இப்போது மேலும் வியாபித்துள்ளது.

பிரித்தானியாவில் அடுத்த பொதுத்தேர்தலில் பதினாறு வயதுடையவர்கள் வாக்களிக்கும் வகையில் தேர்தல் சட்டம் மாற்றப்படுவதாக அந்நாட்டின் பிரதமர் அண்மையில் அறிவித்ததைத் தொடர்ந்தே கனடாவிலும் இதற்கான குரல் வீச்சுப் பெற்றுள்ளது.

ஆஸ்திரியா, நிக்கரகுவா, எதியோப்பியா, எக்குவடோர், பிறேசில், கியூபா உட்பட பல நாடுகளில் பதினாறு வயதுக்காரருக்கு வாக்குரிமை வழங் - கப்பட்டுள்ளது. இந்தோனேசியா, வடகொரியா, சூடான், தென்சூடான் உட்பட பல நாடுகளில் பதினேழு வயதில் வாக்குரிமை உண்டு. அமெரிக்காவின் பல மாநிலங்ளில் பதினாறு மற்றும் பதினேழு வயதுக்காரர் வாக்களிப்பது சட்டமாக உள்ளது.

கனடாவில் கடந்த இரண்டு தசாப்தங்களாக இதற்கான முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. நாடு தழுவிய மட்டத்தில் கன்சர்வேடிவ் மற்றும் லிபரல் கட்சிகள் இதற்கு ஆதரவளிக்கவில்லை.

ரூடோவின் ஆட்சிக் காலத்தில் இதற்கான முயற்சி பல முனைகளாலும் மேற்கொள்ளப்பட்டது. கனடிய உரிமைகள் மற்றும் சுதந்திரத்துக்கு மாறாக கனடிய தேர்தல் சட்டம் பதினெட்டு வயதை வாக்கு உரிமையாக்-கியிருப்பதாக இளம் கனடியர் அமைப்பு 2021ம் ஆண்டில் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது.

பதினாறு வயதை வாக்குரிமைக்குரியதாக மாற்ற வேண்டுமென்ற சட்ட மூலத்தை ரூடோவின் ஆட்சிக் காலத்தில் செனட்டர் மரிலோ மக்பெட்ரன் பிரேரித்தார். ஆனால், நாடாளுமன்ற கலைப்புடன் அது காலாவதியாகி - விட்டது. மீண்டும் இச்சட்டமூலத்தை தாம் சமர்ப்பிக்கப்போவதாக அவர் கடந்த மாதம் அறிவித்துள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் ரொறன்ரோ நகர சபைத் தேர்தலில் பதினாறு வயதை வாக்குரிமைக்குள்ளாக்க பிரேரணை கொண்டு வரப்பட்டபோது சபை உறுப்பினர்கள் அதை ஏற்கவில்லை. இளையோர் வாக்களிப்பு வீதம் அதிகரித்தால் தங்கள் பதவிகள் பறிபோய்விடலாமென இவர்கள் எண்ணியிருக்கலாம்.

பதினாறு வயது இளையோர் கனடாவில் சட்டப்படி தொழில் புரியலாம், சட்டப்படி வரி செலுத்த வேண்டும் என்றிருக்கையில், இவர்களுக்கு ஏன் வாக்குரிமை இருக்கக்கூடாது?

கனடாவின் ஓரிரு மாகாணங்களாவது பதினாறு வயதை அங்கீகரிக்கு - மானால், நாடு முழுவதுமாக இது சட்டமாகலாம் என்ற கருத்தை இளையோர் முன்வைத்துள்ளனர்.

பூனைக்கு மணி கட்டுவது யார்?

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

தொலைபேசி:
416 920 9250

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் & தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

தொழில்நுட்ப உதவி
ஹரன்கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

இணையம்
www.tamilsinformation.info

தமிழர் தகவல் TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

E-mail
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
R. R. Rajkumar

Public Relation
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies

Website
www.tamilsinformation.info

செப்டம்பர் 29
றொறன்ரோ 25ம் வட்டாரம் மார்க்கம் 7ம் வட்டாரம் இடைத்தேர்தல்

றொறன்ரோ நகரசபையின் 25ம் வட்டாரம் (ஸ்காபரோ - றூஜ்பார்க்) மற்றும் மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டாரம் ஆகியவற்றுக்கான இடைத் - தேர்தல்கள் எதிர்வரும் செப்டம்பர் 29ம் திகதி இடம்பெறவுள்ளது. மேற்படி இரண்டு வட்டாரங்களிலும் உறுப்பினர் - களாகவிருந்த மக்லெவின் மற்றும் ஜுனிதா நாதன் ஆகியோர் கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற பொதுத்தேர் - தலில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவானதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இடைத்தேர்தல் இடம்பெறுகிறது.

றொறன்ரோ நகரசபையின் 25ம் வட்டாரத்துக்கு 15 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இந்த வட்டாரத் - தின் நகரசபை உறுப்பினராக முன்னர் பதவி வகித்த ஒரேயொரு தமிழரான நீதன் சண் மற்றும் அனிதா ஆனந்தராஜா, சியான் சின்னராஜா, அனு சிறிஸ்கந்தராஜா ஆகிய நான்கு தமிழர்கள் இதில் போட்டியிடுகின்றனர்.

மாரக்கம் 7ம் வட்டாரத்தில் மூவர் போட்டியிடுகின்றனர். ஏற்கனவே இந்த வட்டாரத்தில் போட்டியிட்ட பொதுச் - சேவை செயற்பாட்டாளர் கிள்ளி செல் - லையா மற்றும் ஆரணி முருகானந்தன் ஆகிய இருவரும் தமிழர்கள்.

அடுத்த வருடம் அக்டோபர் மாதம் ஒன்ராறியோவில் அனைத்து உள்ளூ - ராட்சிச் சபைகளுக்கும் தேர்தல் நடைபெறும் காலம். இரண்டு இடைத் - தேர்தல்களிலும் வெற்றி பெறுபவர்கள் அடுத்த அக்டோபர் மாதம்வரை தங்கள் பதவிகளை வகிப்பார்கள்.

தமிழர் தகவலை தபாலில் பெற

416 920 9250

tamilsinfo@sympatico.ca
thiruthiru@sympatico.ca

கனடிய செலவினங்களில் வருடாந்தம் 25 பில்லியன் வெட்டு! 60,000 அரச ஊழியர் வேலை இழப்பர்!!

மார்க் கார்னி தலைமையிலான கனடிய லிபரல் அரசு அதன் வருடாந்த செலவினங்களில் 25 பில்லியன் டாலரை வெட்டுவதற்கு முடிவெடுத்துள்ளது. தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு இவ்வாறான 25 பில்லியன் டாலர் வெட்டு இருக்குமென்று சகல அமைச்சர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய அரசின் வரவு-செலவு திட்டத்தில் விபரங்களை அறிவிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு அமைச்சும் மேற்கொள்ளவுள்ள செலவினக் குறைப்பை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. மொத்தமாக மூன்று வருடங்களில் 75 பில்லியன் டாலர்களை வெட்டுவதானது, அரசாங்க சேவையிலுள்ள பணியாளர் - களை பெருமளவில் குறைக்குமென அச்சம் பெருமளவில் வெளியிடப்பட்டுள்ளது.

பணியாளர் குறைப்பானது அவர்களை மட்டுமன்றி பொதுமக்களையும் எவ்வாறு பாதிக்குமென்பது தெரியுமென நாடாளுமன்ற வரவு செலவுத் திட்ட அதிகாரி Yves Girous தெரிவித்துள்ளார்.

இதனையொட்டி அரச சேவை பணியாளர்களின் சங்கங்களும், கூட்டமைப்புகளும் தங்கள் கடுமையான எதிர்ப்பை பகிரங்கமாக தெரிவிக்க ஆரம்பித்துள்ளன. கனடிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (CBC) மற்றும் VIA ரயில் சேவை பணியாளர்களையும் குறைப்பது தொடர்பாக இந்த நிறுவனங்களுக்கு முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நேட்டோ மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுக்கிணங்க கனடிய பாதுகாப்பின் அவசியம் கருதி அதற்கு 150 பில்லியன் டாலர்களை ஒதுக்க பிரதமர் மார்க் கார்னி முடிவெடுத்தது குறிப்பிடத்தக்கது.

DIFFICULT DECISSION : MORE CUTS TO COME

The Liberal government wants to find roughly $25 billion in annual savings from the federal budget within the next three years, a higher than expected target that the independent Parliamentary Budget Officer says will likely require civil service layoffs and cuts to funding for outside organizations.

The clarity about the goal of the government's incoming expenditure review, sheds new light on how Prime Minister Mark Carney's government is aiming for almost twice the level of internal 'savings' than the Liberals promised during the spring federal election campaign. It also raises further questions about which federal initiatives could face cuts and job losses as Ottawa's spending power shifts towards the Canadian military

In an interview, Parliamentary Budget Officer Yves Giroux said the large scope of the savings exercise is 'doable,' but not without consequences. "It's just a matter of how much pain will that inflict on public servants and on Canadians," he said.
Despite Carney's pledge earlier this year to "cap" the size of the federal public service, Giroux predicted that staff cuts - beyond attrition - "will be almost unavoidable,"

எஸ்.தி

றஞ்சி திரு

சின்னச் சின்ன தகவல்கள்

கனடிய லெஜர் நிறுவனம் நடத்திய கருத்துக் கணிப்பின்படி கனடாவில் மிக மகிழ்ச்சியான நகரமாக மிஸிஸாகா தெரிவாகியுள்ளது. அடுத்த - டுத்த நான்கு இடங்களில் மொன்றியல், ஹமில்ற்றன், கல்கேரி, பிராம்ரன் ஆகிய நகரங்கள் இடம்பெறுகின்றன. ரொறன்ரோ எட்டாவது இடத்திலுள்ளது. கனடாவில் மக்கள் மகிழ்ச்சியாக வாழும் மாகாண - மாக கியுபெக் தெரிவாகியுள்ளது. ஒன்ராறியோ மாகாணம் இதிலும் எட்டாவது இடத்திலுள்ளது.

பிரித்தானியாவில் ஒருவர் தேர்தலில் வாக்களிப்பதற்கான வயதை பதினாறாகக் குறைப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. இளையோர் மத்தியில் ஜனநாயக ஈடுபாட்டை அதிகரிக்கும் நோக்கில் புதிய சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. தேர்தலின்போது வெளிநாடுகளின் தலையீட்டை கட்டுப்படுத்துவது, நன்கொடை வழங்குவதை மட்டுப்படுத்துவது என்பனவும் புதிய சட்டத்தில் அடங்குகின்றது. 1969ல் இங்கு வாக்களிப்பின் வயது 21 இலிருந்து 18 ஆகக் குறைக்கப்பட்டது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள கில்ரோய் என்ற இடத்தில் வருடாந்தம் உள்ளி விழா (Garlic Festival) இடம்பெறுகிறது. ஒவ்வொரு கோடை காலத்திலும் நடைபெறும் இந்தத் திருவிழாவுக்கு பல பகுதிகளிலிருந்தும் பெருமளவானோர் பங்குபற்றி வருகின்றனர். உள்ளி ஐஸ்கிறீம், உள்ளி வைன் ஆகியவை தயாரிப்பதற்கான போட்டிகள் இதில் முக்கியமானவை. இது தவிர உள்ளியில் விதம் விதமான உணவுகளும் விற்பனை செய்யப்படுகிறது.

மகாத்மா காந்தி ஒரேயொரு தடவை போஸ் கொடுத்த ஓவியம் இந்திய நாணயத்தில் 1.7 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை - யானது. 1931ம் ஆண்டு இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் பங்கேற்பதற்கு காந்தி இந்தியா சென்றபோது பிரித்தானிய கலைஞர் கிலேன் லெய்டன் வேண்டியதற்கு இணங்க காந்தி இதற்கு இணங்கினார். 1974ல் இந்த ஓவியம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இந்தியாவின் நல்பாரி மாவட்டத்திலுள்ள பராலியப்பர் கிராமத்தைச் சேர்ந்த மலிக் அலி என்பவர் தமது சுற்றுவட்டத்திலுள்ள பெருமளவு மக்களைக் கூட்டி, 40 லிட்டர் பாலை தமது தலையில் ஊற்றி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். தமது மனைவியை விவாகரத்து செய்ததால் கிடைத்த விடுதலையை கொண்டாடுவதற்காக இந்த பாலபிசேகத்தை தாமே நிகழ்த்தினார். இவரது செயலை விமர்சித்து சமூக ஊடகங்கள் விளாசியுள்ளன.

அமெரிக்காவின் ரெக்சாஸ் மாகாணத்தில் ஒவ்வொரு நவம்பர் மாதத்திலும் மிளகாய் உணவுப் போட்டியும், காட்சியும் பெரும் எடுப்பில் இடம்பெறுகிறது. பலவிதமான வர்ணங்களில் மிளகாய்களை பார்க்கும்போது மலர்ச்சோலை போல காணப்படுமாம். ஒவ்வொரு காரமான உணவையும் அவற்றின் வெப்பம், சுவை, வடிவமைப்பு அடிப்படையில் நீதிபதிகள் தீர்மானித்து பரிசுகள் வழங்கப்படுகிறது. இந்தக் கண்காட்சி நாளில் இது ஒரு மிளகாய் நகரமாக காட்சியளிக்கிறதாம்.

209 பேர் போட்டி

கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொலிவியருக்கான இடைத்தேர்தல் 18ம் திகதி

கடந்த ஏப்ரல் மாதம் 28ம் திகதி இடம்பெற்ற பொதுத்தேர்தலில் தோல்வியடைந்த கன்சர் - வேடிவ் கட்சியின் தலைவர் பியர் பொலிவியரை நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்வதற்கு ஏதுவாக இடம்பெறும் இடைத்தேர்தல் இந்த மாதம் 18ம் திகதி இடம்பெறவுள்ளது. அல்பேர் - ட்டா மாகாணத்தின் Battle River - Crowfoot தொகுதியில், 82 வீதமான வாக்குகளைப் பெற்று கன்சர்வேடிவ் பிரதிநிதியாகத் தெரிவான டேமியன் குரேக் தமது பதவியை ராஜினாமா செய்து இங்கு இடைத்தேர்தல் இடம்பெறுவதற்கு வழிய - மைத்துக் கொடுத்தார். இத்தொகுதி கன்சர்வேடிவ் கோட்டை என்று கருதப்படுவதால் இங்கு பியர் பொலிவியர் வெற்றி பெறுவாரென கன்சர்வேடிவ் கட்சி நம்புவதால் இது ஏற்பாடானது.

ஒட்டாவா - ஹால்ட்டன் தொகுதியில் 20 ஆண்டுகளாக தொடர்ந்து வெற்றிபெற்று வந்த பொலிவியர் கடந்த தேர்தலில் முன்னர் போதிய அறிமுகமில்லாத லிபரல் கட்சி வேட்பாளர் புரூஸ் பன்ஜோயிடம் தோல்வியடைந்தார். இத்தேர்தலில் மொத்தம் 91 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். பொலிவியருக்கும் பன்ஜோயிக்குமே 90 வீத வாக்குகள் கிடைத்தன. இந்த மாத இடைத்தேர் - தலில் 209 பேர் போட்டியிடுகின்றனர். ஆனும் லிபரல் கட்சி அபேட்சகரை நிறுத்தவில்லை. ஆனால், மற்றொரு வேட்பாளரை ஆதரித்து பரப்புரை செய்கிறது. பொலிவியர் இந்த இடைத்- தேர்தலில் வெல்வாரானால் நாடாளுமன்றத்தில் மீண்டும் எதிர்க்கட்சித் தலைவராவார். தவறினால் கட்சியின் தலைவர் பதவியை இழக்க நேரிடும்.

மிஸிஸாக நகரில் 14 பில்லியன் டாலரில் கனடாவின் மிகப் பெரிய போதனா மருத்துவமனை

ஒன்ராறியோவின் மிஸிஸாக நகரில் கனடாவின் மிகப்பெரிய போதனா மருத்துவமனை நிர்மாணிக் கப்படவுள்ளது. இதற்கென ஒன்ராறியோ மாகாண அரசு 14 பில்லியன் டாலரை ஒதுக்கியுள்ளதாக முதலமைச்சர் டக் ஃபோர்ட் அறிவித்துள்ளார். இது அவசர சிகிச்சைப் பிரிவையும் உள்ளடக் - கியது. மிஸிஸாக பிரதேசம் வேகமாக வளர்ந்து வரும் மாநகரம். இங்கு வாழும் சுமார் 2.2 மில்லியன் மக்களுக்கு இந்த மருத்துவமனை அவசரமான தேவை என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். இந்த மருத்துவமனையில் 3,000 படுக்கை வசதிகள் இருக்கும்.

ஊரும் உலகும் - 41

பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன்

சொற்பிறப்பியல் ஆய்வின் முன்னோடி

நல்லூர் ஞானப்பிரகாச சுவாமிகள் - 1875 - 2025

சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை இளம் வயதிலேயே நன்கு கற்றுத் தெளிந்த ஞானப்பிரகாச சுவாமிகள் 1901ல் அமலமரித் தியாகிகள் சபையில் கத்தோலிக்க குருவாக திருநிலைப்படுத்தப்பட்டுப் பணிசெய்தார். அச்சபையின் நிர்வாக முதல்வர்களாக இலங்கையில் பணிபுரிந்த அயர்லாந்து, இத்தாலி, பிரான்சு, இஸ்பானியா நாடுகளை சார்ந்த துறவிகளின் தொடர்பு மொழியறிவியல் (Philology) ஒப்பியல் தேடலில் ஈடுபட்ட சுவாமி ஞானப்பிரகாசருக்கு ஆதர்சமாக அமைந்தது எனக்கருதுவதில் தவறில்லை.

நவீன மொழியியல் வரலாற்று ஆய்வுகள் மொழித்தோன்றலியல் (Philology), சொற்பிறப்பியல் ஆகிய ஆய்வுத்துறைகளிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டும் என பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரையிலே அறைகூவல் விடுத்தவர் பிரெஞ்சுப் பேரறிஞர் ஏர்னெஸ்ட் றேனான் (Ernest Rennan). ஆனால் சுவாமி ஞானப்பிரகாசர் தனது மொழியியல் தேடலில் இந்த உள்ஒளியை வேறுவழியில் துய்த்துணர்ந்து பல ஆய்வுகளை தாமாகவே முன்னெடுத்த ஓர் முன்னோடி.



சிறுவயதில் தந்தையை இழந்த சுவாமியாருக்கு அவரது சிறியதந்தையான அச்சுவேலி தம்பிமுத்துப்பிள்ளையின் அரவணைப்பு பேருதவியாகியது. அச்சக உரிமையாளரான தம்பிமுத்துப்பிள்ளை இந்தியாவிலிருந்து பல இலக்கிய இலக்கண நூல்களை வருவித்ததோடு தாமும் பல நூல்கள் பத்திரிகைகளையும் பிரசுரங்களை அச்சிட்டு வெளியிட்டு வந்தார்.

உலகப் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் மொழியியல் துறை இன்று துரித வளர்ச்சி பெற்று வருகின்றது. நவீன மொழியியலின் முன்னோடியும் மூத்த வழிகாட்டியுமான சேர் வில்லியம் ஜோன்ஸ், பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் (1786) சமஸ்கிருதம், கிரேக்கம் மற்றும் லத்தீன் ஆகியவை இந்திய, ஐரோப்பிய மொழிக்குடும்பம் சார்ந்தவை எனும் புதிய கருத்துருவை முன்வைத்தார். அவரது கருத்தை அடியொற்றிய ஆய்வுகள் பரவலாக, ஜெர்மனி, பிரித்தானியா, பிரான்சு ஆகிய நாடுகளிலும் இன்னும் ஆசியாவின் பண்டைய மொழிகளுக்கு இடையேயும் சில ஆய்வுசால் ஒப்புநோக்குகளைத் தூண்டியது. ஒப்புநோக்கு மொழியியல் பற்றி இந்தியாவிலும் சில புதிய எடுகோள்கள் முன்வைக்கப்பட்டன.

இதன் பக்க விளைவாக பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலேய, இந்திய மொழியியல் ஆர்வலர்கள் அரைவேக்காடான ஆரிய - திராவிட மொழிக்குடும்ப கருதுகோள்களைப் பிரசவித்தனர். இவ்வெண்ணக்கரு நுட்பமான திறனாய்வுகளைத் தவிர்த்த நிலையில் மேலோட்டமான மொழிவாரிப் போராட்டங்களுக்கு இன்றுவரை தூபமிட்டு வருகின்றனவென்பதும் உண்மை.

கீழைத்தேய அறிவியல் பற்றி மேலைத்தேய அணுகுமுறை அலகுகளைக் கொண்டு ஐரோப்பியர்கள் தமது மொழி மேலாண்மைச் சிந்தனையின் பின்புலத்தில் வடிகட்டி இதுவே கீழைத்தேசவியல் என எமக்கு அதனை மீளளித்து எம்மை நம்பவைத்தனர்.

இந்திய - ஐரோப்பிய மொழி வட்டத்தினுள் சமஸ்கிருதம் உள்வாங்கப்பட்டமையால் வட இந்தியாவில் வளர்ந்த ஆங்கில மோகமும், மேலைதேய உயர்குடி வணக்க வழிபாடும் தென்இந்தியாவிலும் அவ்வப்போது சில தாக்கங்களை ஏற்படுத்தியது.

இவற்றை முற்றாக மறுத்த நிலையில் சுவாமி அவர்களின் ஆய்வுகள் அமைந்தன. ஆனால் இன்று நாம் பெறக்கூடிய ஆய்வுத் தரவுகள் பலவற்றை அன்று, சுவாமி அவர்கள் பெற வழி இருக்கவில்லை. அவராகவே மூலப்பனுவல்களை தேடிப்பெறும் நிலையே அப்போது இருந்தது.

காலத்தால் மூத்த மொழிகளின் முன்வரிசையில் உயிர்வாழ்மொழி தமிழ் உள்ளதென்பது இன்று உலகளாவிய நிலையில் மொழியியல் அறிஞர்களால் ஏற்கப்பட்டுவருகின்றது. தமிழ்மொழியின் வரலாற்றுச் சிறப்புகளில் ஒன்று அதன் உள்ளக தூலங்கள் பலவற்றையும் இருபது நூற்றாண்டுகளின் முன்பே மிக நுணுக்கமாக இனம்கண்டு எமக்கு தொல்காப்பியப் பேராய்வு நூலாக்கப்பட்டமையாகும்

கிழக்கத்திய நாடுகளில் மொழிகளைப் பாதுகாப்பதிலும் அதனை செழுமைபடுத்தலிலும் மத இலக்கியப் படைப்புகள் முக்கிய பங்கு வகித்தன. இந்துமதம் சமஸ்கிருதத்தையும், புத்தம் பாளியையும். சைவ, வைணவ மரபுகள் தமிழ் மொழியையும் கிறிஸ்தவம் கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளையும், இன்னும் யூதமதம் ஹீப்ரு மொழியையும் சில மொழிகள் பேச்சுவழக்கில் இறந்த பின்பும் தத்தமது சமய வழிபாட்டுநெறிகளில் இன்றுவரை பேணி வருகின்றன.

தமிழியல் பரப்பில் மொழியியல் சார்ந்த துறையில் மிகத்தேவையான ஒரு தேடல் புலத்தை எமக்குக் காட்டிச் சென்ற முன்னோடிகளில் மூத்தவராக விளங்கும் சுவாமி ஞானப்பிரகாசர் வகுத்த ஆய்வுப் பாதையில் தமிழ் ஆய்வு மாணவர்கள் சிலரேனும் தொடர்ந்து பயணிக்க முனைவார்கள் என்பதே எமது அவா. இவ்வாண்டு சுவாமியவர்களின் 150 வது பிறந்ததின விழாவையொட்டி தமிழ் மொழிக்கும் அவருக்கும் நாம் செய்யும் பெருமைமிகு சேவை அவர் வளர்க்க முனைந்த இந்த ஆய்வுப்புலத்தை முன்னெடுப்பதேயாம்,

Source: Chandrakanthan, A.J.V. , "Beyond Wittgenstein: Life and Thoughts of Nalloor Swami Gnanapragsar" in

Jnana Dhara, Jnana Deepa Vidyapeeth Student Journal, Pune, 1976, pp.6-9

Chandrakanthan, A.J.V. "Swami Gnanapragasar" in Biographical Dictionary of Christian Missions, Edited by Gerald H. Anderson, (New York: Macmillan Reference Books), 1998.

Said Edward, Orientalism, (New York, Random House, Inc.), 1979, pp.131-133

மருத்துவர் போல் ஜோசேப்

உடல் மொழி - பகுதி - 3

யுத்தம் சுகம் தரும்

நமக்குள்ளே நாளாந்தம் நடக்கின்ற ஓர் ஆரோக்கியமான போர்க்களத்திற்குள்ளே சின்னச் சுற்றுலா செல்லலாமா? உடலிலுள்ள பல ரில்லியன் கலங்களில் ஒரேயொரு கலம் மட்டும் தன் செயற்பாட்டையும் கட்டமைப்பையும் சிறிது மாற்றிக்கொண்டாலோ அல்லது உடலின் ஒழுங்கு முறைக்கு மாறாக செயற்பட்டாலோ அந்த மாற்றம் அதனைச் சுற்றியுள்ள கலங்களிலும் பிரதிபலிக்கும். பிறகு சில கலங்கள் இணைந்து ஒரு குழுவாகச் செயற்படத்தொடங்கும்.

இந்த எதிர்ப்பை சமாளிக்க கலங்களிலுள்ள டிஎன்ஏக்கள் தங்களை எதிரிகள் போல காட்டாமல் இருப்பதற்கான அத்தனை திருகுதாளமும் செய்து அவற்றை ஏமாற்றி எந்த விதத்திலாவது தான் எதிரியல்ல என்பதை நிரூபித்து அதில் வெற்றியும் கண்டு தமக்கென உணவும் ஊட்டமும் பெற இரத்தக் குழாய்களையும் அதற்கான இணைப்புகளையும், உணர்வையும் உணர்ச்சிகளையும் பரிமாறிக்கொள்ள நரம்புக்கேபிள் இணைப்புகளையும் பெற்று தனியாக ஒரு புதிய உறுப்பு உருவானது போலவும் அது ஒரு தனி நாடாகச் செயற்பட்டு புதிய குடிவரவாளர்களை வரவேற்று உள்வாங்கி ஒரு பலம் பொருந்திய தனித்தேசமாக தேகத்தில் செயற்படும். அது வேறொன்றுமல்ல, உயிரைப் பலிகொள்ளப் போகும் புற்றுநோய்க் கட்டிதான் என்பது உடலுக்குத் தெரியாமலே நடக்கும்.

யாரோ புதுசா சில பயல்கள் உள்ளே நுழையுறமாதிரி மூக்கு தகவல் அனுப்பிக் கொண்டேயிருக்கிறார், தொண்டையிலிருக்கும் முதல் நிலை உளவுத்துறை அதிகாரி ரொன்சில் அதை உறுதி செய்து எதிரிகளைப் பற்றிய ஓரளவு தகவல்களை பாதுகாப்பு அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ளார். அவை உள்ளே நுழையாமல் மூக்கிலும் தொண்டையிலும் வைத்து அவர்களைத் தாக்கி அழிக்க முடியுமா என்று பாதுகாப்பு அதிகாரிகளின் அவசரக் கூட்டம் நடந்து அதற்குத் தேவையான ஆயுத்தப்பணிகளும் தொடங்கிவிட்டன.

அதற்குத் தேவையான பௌதிக, இரசாயன, உயரியல் ஆயுதங்கள் அனைத்தும் தயார் செய்யும். மூக்கிலும் தொண்டையிலுமுள்ள சளிமென்சவ்வுப்படலம்தான் உடலின் முன்னணி பாதுகாப்புப்படையாகும் அதையும் தாண்டி பல எதிரிகள் சுவாசப்பைக்குள்ளே சென்றாலும் அங்கும் இதேபோல அதிஉயர் பாதுகாப்பு வலயமான மென்சவ்வுப் படலம் மிகவும் சக்தி வாய்ந்த இரசாயன ஆயுதமான சளியைச் சுரந்து எதிரியை மூழ்கடித்து திரட்டி உருட்டி சளியாக இருமல் எனும் பீரங்கி மூலம் அப்படியே கொலைவெறித் தாக்குதலை நடத்தி நம்மைப் பாதுகாக்கும் இருமல் நல்லதல்லவா!

தொண்டையிலிருந்து எதிரிகள் பலர் எப்பிடியோ தப்பித்து இரைப்பைக்குள்ளேயும் செல்வது வழக்கம். அவை பெரும்பாலும் இரைப்பையிலுள்ள அமிலத்தில் அமிலக்குளியல் எனும் தாக்குதலால் தப்பிப்பிழைப்பது அரிதான காரியம். இதேபோல நம் கண்ணீரும், உமிழ்நீரும் ஏதோ அழுவதற்கும், காறித்துப்புவதற்கும் என்று எண்ணிவிடாதீர்கள், அவையும் சில இரசாயன ஆயுதங்களை வைத்திருக்கும் எல்லைப்படைதான்.

இப்படிப் பல எல்லைகளையும் தாண்டி டிமிக்கி கொடுத்துவிட்டு கிருமிகள் உள்ளே நுழைவதும் நடக்கத்தான் செய்கிறது. சில நோய்க்கிருமிகள் குறிப்பாக பல வைரஸ் கிருமிகள் இப்படி உள்ளே நுழைந்ததுவிடும். இது ஒரு பெரிய கதை.

நாம் தாயின் கருவறையில் உருவாகும் போதே எங்களுக்குள் உருவாகி நாம் பூமிக்கு வந்ததும் பாதுகாப்பாய் வாழ அன்னை உருவாக்கி தந்த அற்புதமான பாதுகாப்புப் படைதான் நோய் எதிர்ப்புசக்தி. கருவறையிலேயே அன்னை வடிவமைத்து இன்னும் நம்மோடு இருக்கும் விலைமதிப்பில்லாச் சொத்து. குருதியிலும் நிணநீரிலும் உள்ள வெள்ளை அணுக்கள், பிளாஸ்மா என்ற புரதத்திரவம், மற்றும் நிணநீர்திரவம் இவைதான் நம்தேகத்தின் அதிஉச்ச பாதுகாப்புப் படைகளைக் கொண்ட ஒரு கட்டமைப் பாகும். இதிலுள்ள வெள்ளை அணுக்கள், ஏதோ வெள்ளை என்ற பேரைக் கேட்டு சமாதானப் புறாக்கள் என்று எண்ணிவிடாதீர்கள்.

தேகத்திலும் வெள்ளை அணுக்களுக்குள்ளே பல பிரிவுகளுண்டு. 60 வீதமானவை நியூற்றோபில்ஸ் வகையைச் சார்ந்தவை. எதிரிகள் கிருமிகள் வடிவில், உள்ளே நுழைந்ததும் முதலில் இவைதான் எதிரிகளுக்கு 'முதல் எதிரிகள்'. முடிந்தவரை எதிரிகள் இவற்றைத்தான் குறிவைத்து தங்கள் தாக்குதலைச் செய்து, இவற்றிற்குள்ளே புகுந்து தங்களைப் பெருக்கிக் கொள்ளமுயற்சிக்கும்.

முதலில் உள்ளே நுழையும் எதிரிகளின் கலச்சுவரிலுள்ள 'நுண்ணுணர்வு கொண்ட புரதங்கள்', எவையெல்லாம் 'நோஞ்சான் வெள்ளை அணுக்கள்' எனபதை அறிந்து அவற்றின் கலச்சுவரை உடைத்து நுழைந்து முதலில் தங்களைப் பெருக்கிக் கொள்ளும் வேலையைத் தொடங்கிவிடும். பொதுவாக வைரஸ் கிருமிகளின் தாக்கத்திலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால் அவற்றை வெள்ளை அணுக்களுக்குள்ளே ஊடுருவல் செய்வதை தடுத்தாலே 90 வீதம் வெற்றிதான். ஏனென்றால் வைரஸ் கிருமிகள் மற்ற உயிரினங்களைப் போல காதல், கல்யாணம், முதலிரவு, தாம்பத்தியம், பிள்ளைப்பேறு என்றோ, அல்லது சாதகப் பொருத்தம், பஞ்சாங்கம் பார்த்தோ தங்கள் இனத்தை பெருக்கிக் கொள்பவை அல்ல.

உடலுக்குள்ளே நுழைந்ததும் இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களுக்குள்ளே நுழைந்தால் மட்டுமேதான் அவற்றால் சிலநாட்கள் உயிர்வாழமுடியும். இல்லையென்றால் நுழைந்த சிலநாட்களில் இருக்க இடமன்றி, உணவின்றி, குருதியிலுள்ள பிளாஸ்மாக்களுக்குள்ளே மூழ்கி ஒரு நல்லவிடயத்தையும் செய்துவிட்டு மடிந்துபோகின்றன.

கெட்ட வைரசும் சிலவேளை நமக்கு நல்லதையும் செய்யும், எப்படியென்றால் குருதியில் மடிந்துபோன கிருமிகள் தங்கள் நினைவாக நமக்குள்ளே 'நினைவுச் சின்னங்களான' புரதங்களை விட்டுச்செல்லும். இவை 'நோய் எதிர்ப்பான் புரதங்களான' அன்ரிபொடீஸ்களை (Antibodies) பிளாஸ்மாவான குருதி திரவத்தில் விட்டுச் செல்வதால் இவை மீண்டும் இதே வைரஸ்கள் உள்ளே நுழையும்போது அவற்றை அடையாளம் கண்டு இலகுவாக தாக்கி அழிக்கும் வல்லமை கொண்டவை.

More Canadians avoiding U.S. goods, travel amid Trump trade war: Poll

Canadian attitudes toward the United States have soured further during U.S. President Donald Trump's trade war, a new poll suggests, with a growing majority of Canadians avoiding U.S. goods and travel compared to four months ago.

The new Ipsos poll conducted exclusively for Global News, released y in time for Canada Day (July 1), found around three-quarters of Canadians surveyed say they intend to avoid travel to the U.S. — up 10 points since February — while the number of people avoiding U.S.-made goods has risen five points to 72 per cent.

A PwC Canada report released last week showed 75 per cent of Canadian consumers said they would pay more for premium or locally produced food products, but still voiced concerns about those higher costs.

Ipsos' online poll of 1,000 Canadians across the country was conducted before Trump announced Friday he was terminating trade talks with Canada. The talks were restarted after Canada on Sunday said it would rescind a controversial digital services tax.

Those talks had been given renewed urgency after Prime Minister Mark Carney won a minority Liberal government in April's federal election, with Carney and Trump holding direct-levels talks in addition to broader negotiations in recent weeks.

Before Trump's Friday announcement, he and Carney agreed at the G7 summit to negotiate a new trade and security agreement within 30 days.

Braid said those numbers reflect the general honeymoon period Carney's government has been in since the election.

While anger toward the U.S. was seen across all age groups surveyed, those attitudes were particularly strong among older Canadians.

"It's true also among younger folks, but to a much, much lesser degree," Braid said.

As anti-U.S. sentiment grows, Canadian pride has only increased, Ipsos also found.

Nearly half of those surveyed, 47 per cent, said they are more likely to feel proud to be a Canadian than they were five years ago, up a whopping 31 points since last June.

Around one-third said they were more likely to attend a Canada Day event or display a Canadian flag to mark the national holiday, with both numbers also up by double digits.

Forty-four per cent also said they would speak positively about Canada to someone not from the country, a number that was 17 points higher than last year, while 36 per cent said they would learn more about Indigenous history in Canada, up three points.

Older Canadians also fuelled the higher numbers in support of Canada overall, while younger people were more likely to want to attend Canada Day festivities at higher numbers.

The shares of Canadians surveyed who said they were less likely to do any of those things fell by double digits across the board compared to 2024.

Ipsos noted the higher positive sentiment generally exceeded levels observed in 2023 as well.

"For the last few years, we have seen declining pride in Canada in almost every survey we've done," Braid said.

"Some of it's explainable: issues around reconciliation with Indigenous groups, residential schools, rising cost of living, feelings that Canada's broken, lack of opportunities for young people. I don't remember anyone prescribing that all we needed was a loudmouth bully threatening our economy and sovereignty to reignite pride and flag in country. But that's what's happened and that's how Canadian pride has been been restored.

Doug Ford says, " Trump is acting like an enemy"

"You know what Churchill said, "our enemy of our enemy is our friend, and I don't consider Americans the enemy, but right now President Trump himself is acting like the enemy,". He further said that he don't trust Trmph.

கவல்கணன் - ஆஸ்திலேலியா

நாடோடி மன்னன் செங்கிஸ்கான் அடிச்சுவட்டில் நான் 2

சென்ற மாத கட்டுரையின் இறுதிப் பகுதி

பாரம்பரியமாக மொங்கோலியர்கள் கூடாரம் எப்படியிருக்கும் என்பதையும் பார்க்க ஆவல் இருந்தமையால் எமது சுற்றுலா வழிகாட்டி எம்மை ஒரு உள்ளூர் குடும்பத்தைச் சந்தித்து அவர்களின் வாழ்க்கை முறை அறியவும் அவர்களின் உணவு வகைகளில் சிலவற்றை உருசிக்கவும் ஒழுங்கு செய்து அழைத்துச் சென்றார். நாங்கள் அங்குசென்ற போது, அவர்களது பாரம்பரிய முறைப்படி ஒட்டகம், குதிரை மற்றும் வளர்ப்பு யாக் (yak) மீது ஏறி வந்து அவர்களது கூடாரங்கள் அமைந்துள்ள இடங்களின் வாசலில் நின்று எம்மை வரவேற்றார்கள்.

அவர்களது பாரம்பரியக் கூடாரங்களில் வாசலும் தெற்கு நோக்கியதாகவே அமைக்கப்பட்டிருக்கும். கூடாரத்தின் இடது புறம் குடும்பத் தலைவனுக்கா - கவும் வலது புறம் தலைவிக்காகவும், நடுப்பகுதி சந்ததியினருக்காகவும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. தலைவன் தனது பொருட்கள் மட்டுமின்றி வேட்டை உபகரணங்கள் போன்ற விடயங்களும் அவர் பக்கம் இருந்தன. அவளது உடைகள், அலங்காரப் பொருட்கள் மட்டுமன்றி சமையல் பாத்திரங்களும் மனைவியின் பக்கத்தில். நடுவில் அவர்களது தாய் தந்தையர், பேரன்-பேத்தி என்று அவர்களது மூதாதையர் படங்கள், அவர்கள் பாவித்த பொருட்கள் என்பன ஒரு சாமி அறை போல இருந்தது. கூடாரத்தின் நடுவில் சமையல் நடக்கும். குடும்பத்தில் சிறார்கள் இருந்தால் அவர்களும் பெற்றோருடன் கூடாரத்திலேயே தூங்குவார்கள். வயது வந்த ஆண்கள் தனியாக கூடாரம் அமைத்து சென்று விடுவார்கள்.

அவர்களது வாழ்க்கை முறை இயற்கையோடு, மேய்ச்சல் மற்றும் அது சார்ந்த விலங்குகளை மையமாகக் கொண்டு இயங்குகிறது. அவர்களது பாரம்பரிய நடவடிக்கைகளில் பங்கேற்க அவர்கள் எங்களை அனுமதித்ததால், உண்மையான மொங்கோலிய கலாசாரத்தை அனுபவித்த நாங்கள் பிரமிப்பில் இருந்தோம். மொங்கோலியர்கள் பெரும்பாலும் தங்கள் குலங்கள் மற்றும் தமது சந்ததியினரைச் சுற்றி தமது வாழ்க்கையை ஒழுங்கமைத்துள்ளார்கள். கடினமான வாழ்க்கை என்றாலும் அவர்கள் பொழுது போக்கிற்காக பல இசைக் கருவிகளை இசைக்கிறார்கள். அதில் மதிப்புமிக்க வடிவங்களில் ஒன்று அவர்களது 'தொண்டையிலிருந்து பாடும் முறை (Mongolian throat singing)' அவர்கள் தங்கள் சுற்றுப்புறங் - களைப் பிரதிபலிக்கும் இசையை - மலைகள், காற்று, நீர், பறவைகள் மற்றும் பிற விலங்குகளின் ஒலிகள், மனிதன் மற்றும் இயற்கையின் ஒற்றுமை மற்றும் ஆன்மாவின் எதிரொலிகளை அவர்கள் ஒலிக்கிறார்கள். குதிரைத் தலை கொண்ட பிடிலில் இசைக்கப்படும் மெல்லிசையும் மிகவும் இரசிக்கக் கூடியது.

இந்தப் பயணத்தில் பார்த்து இரசித்த பல விடயங்கள் பற்றி நிறைய எழுதலாம். ஆனால் சுருக்கமாக சிலவற்றை சொல்லிவிட்டு முக்கிய கருப் பொருளுக்கு செல்ல விரும்புகிறேன். அவர்களது கதைகளில் ஆமை முக்கிய பங்கு வகிக்கிறது. மேய்ச்சல் மிருகங்களான ஒட்டகம், குதிரை, யாக், ஆடு போன்றவற்றிலிருந்து பால் எடுப்பது மட்டுமன்றி அதன் இறைச்சியை அவர்கள் உண்கிறார்கள். கோழி அவர்களது உணவுப் பழக்கத்தில் அறிமுகமானது இருப - தாம் நூற்றாண்டில்தான். தானியத்திலிருந்து அவர்கள் சாராயம் வடிக்கிறார்கள்.

காடுகளில் ஒரு காலத்தில் அழிந்து போகும் நிலையிலிருந்த பிரஸ்வால்ஸ்கி வகைக் குதிரைகளை மீண்டும் வெற்றிகரமாக மீட்டெ - டுத்த திட்டத்திற்கு பிரபலமான குஸ்தாய் தேசிய பூங்காவில் சுதந்திரமாக சுற்றித் திரியும் இந்த அற்புதமான காட்டுக் குதிரைகளைப் பார்க்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. சிவப்பு மான்கள் மற்றும் மர்மோட்கள் உட்பட வேறு சில வன விலங்கு இனங்களைக் காண முடிந்தது. பூங்காவின் மாறுபட்ட சுற்றுச்சூழல் அமைப்பு இந்த விலங்குகளுக்கு வாழ்விடங்களை வழங்குகிறது.

பட்டுப்பாதையில் (silk route) ஒரு முக்கிய நகரமாக, மொங்கோலியாவின் பழைய நகரான கார்கோரின் இருந்தது. 13 ஆம் நூற்றாண்டில், உலகம் முழுவ - திலுமிருந்து வர்த்தகம் செய்பவர்களை அங்கே குடியேற ஈர்த்தது. சீனர்கள், திபெத்தியர்கள், உய்குர்கள், பாரசீகத்தவர்கள், இந்தியர்கள், பிரெஞ்சுக்காரர் - கள், ஜேர்மனியர்கள், ஹங்கேரியர்கள் மற்றும் ரஷ்யர்கள் உள்ளிட்ட பல்வேறு நாட்டினர் இந்த நகரில் வசித்து வந்தனர். அங்கு, அனைத்து மதங்களையும் மொங்கோலியப் பேரரசு ஏற்றுக் கொண்டது. பௌத்த மடங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் இஸ்லாமிய மசூதிகளை நிறுவ வழிவகுத்தது.

தற்போதைய உலக நடப்பில் இப்படியான ஒற்றுமையை அனைத்து நாடுகளும் கடைப்பிடித்தால் மனித குலம் மேலும் முன்னேறலாம். அந்தச் சிந்தனைக்கு அடிப்படைக் காரணம், ஒரே ஒருவர்தான் செங்கிஸ்கான்.

நான் தேடிய ஒற்றுமையை அங்குதான் கண்டேன். அந்த ஒற்றுமையின் ஆணிவேர் செங்கிஸ்கான். அவரது வரலாற்றை சுருக்கமாகச் சொல்கிறேன், ஏன் என்பது உங்களுக்குத் தெரிந்துவிடும்.

செங்கிஸ்கான் 1162 ஆம் ஆண்டு பிறந்த போது அவருக்கு சூட்டப்பட்ட பெயர் தெமுஜின். மொங்கோலியாவின் ஆயர் நாடோடி இனங்களில் பிறந்த இவர், சிறு வயதிலேயே தந்தை இறந்ததால், பல சவால்களை எதிர்கொண்டு வளர்ந்தார். தனது துணிச்சலும், துடிப்பும் மூலம், பதின்ம வயது முடியும் முன்னரே, மொங்கோலியாவில் ஒருவருடன் ஒருவர் மோதிக் கொண்டிருந்த பூர்வீகக் - குடிகளை ஒருங்கிணைத்தார். மொங்கோலிய அரசின்...

(29ம் பக்கம் வருக)

கனகேஸ்வரி நடராஜா

முதுமை - இயலாமை பராமரிப்பு சேவைகள்

முதுமை வந்தால் இயலாமை வரும்தானே என பலரும் கூறலாம். ஆனால், இங்கு குறிப்பிடப்படும் இயலாமை என்பது பாரதூரமான இயலாமையாகும். இன்று முதியோர் பலர் நூறு வயது வரை வாழ்வது சாதாரண விடயமாகி விட்டது. பாரிய நோய்கள் வந்த பின்னரும்கூட இன்றைய மருத்துவ வசதிகளின் முன்னேற்றத்தால் நோய்களின் தாக்கங்களைச் சுமந்தவாறு படுக்கையே கதியென பல வருடங்கள் பலர் வாழ்கிறார்கள். பாரிய இயலாமையால் பலரும் தங்கள் இறுதிக் காலத்தில் சிறு குழந்தைகளாக மாறி விடுகிறார்கள்.

வில்லியம் சேக்ஸ்பியர் தமது மனிதனின் ஏழு பருவங்களில் கூறிய இரண்டாம் குழந்தைப் பருவம் இவர்களை பீடித்து விடுகிறது. பட்டினத்தார் தமது பாடலில் கூறிய, “கலகலவென்று மலசலம் வந்து கால் வழி மேல் வழி சார நடந்து.....” என்ற வரிகளை இன்று நேரிலே பார்க்கிறோம். இத்தகைய ஒரு வேண்டப்படாத நிலை வருமென எவருமே எதிர்பார்ப்பதில்லை. இந்தக் கட்டத்துக்கு வந்த பின்னர் முதியோர் மாத்திரமன்றி அவர்களைப் பராமரிக்கும் பிள்ளைகளும் இக்கட்டான நிலைக்கு ஈடுகொடுக்க முடியாமல் தவிக்கிறார்கள்.

இவ்வாறான இயலாமையால் பீடிக்கப்படும் முதியோர்களால் தனித்து இயங்கவே முடியாது. சிறுசிறு உதவிகளுக்குக் கூட பிறரின் தயவை நாட வேண்டியுள்ளது. கட்டிலை விட்டு இறங்க முடியாத இவர்கள் தங்கள் மலசலத்தை டயப்பர்ஸில் கழிக்க வேண்டியுள்ளது. இதனை அடிக்கடி துப்பரவு செய்வது சுலபமானதல்ல. குறித்த நேரத்தில் இவர்களைத் துப்பரவு செய்ய விசேட பயிற்சி பெற்ற பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இந்நாட்டின் காலநிலை அல்லது வேறு காரணிகளால் பணியாளர்கள் வரத் தவறினால் முதியோர் படும் அவஸ்தைக்கு வார்த்தைகள் இல்லை.

பல முதியோர்கள் இயலாமை காரணமாக தாங்களாகவே சாப்பிடவோ, தண்ணீர் குடிக்கவோ முடியாதுள்ளனர். சிலரால் திரவ உணவுகளை மாத்திரமே உண்ண முடிகிறது. சிலர் கைகள் இயங்க முடியாதவர்களாக இருந்தால் இவர்களுக்கு உணவை ஊட்ட வேண்டும். குளிப்பது, தலை கழுவுவது என்பன - வற்றில் மிக அவதானம் தேவைப்படுகிறது. இதற்கான பணியாளரால் சில சமயங்களில் தனித்துக் கையாள முடிவதில்லை.

மறதி நோய் இன்று பல முதியோரை படாதபாடு படுத்துகிறது. தமது சொந்தப் பிள்ளைகளைக்கூட சரியாக அடையாளம் காணமுடியாத கொடிய நோய் இது. 24 மணித்தியாலங்களும் இவர்களைக் கண்காணிக்க வேண்டியுள்ளது. அதனால் இவர்களை வீட்டில் வைத்துப் பராமரிப்பது சிரமமாகிறது. இந்நாட்டு அரசாங்கங்கள் முதியவர்களுக்கும், இயலாதவர்களுக்கும் வழங்கும் இலவச, தனிப்பட்ட பராமரிப்புச் சேவையை நாம் நன்றியோடு நினைவு கூர வேண்டும்.

முதியோர் இல்லங்களில் மின்தூக்கிகளில் பயிற்சி பெற்ற பராமரிப்புப் பணியாளர்கள் பல்வேறு நிறுவனங்களின் அடையாளச் சீருடையில் ஓடித் திரிவது இன்று சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது. இவ்வாறான நோயாளர்களை எவ்வளவு காலத்துக்கு வீட்டில் வைத்துப் பராமரிக்கலாம் என்பதில் அரசாங்கம் இப்போது கவனம் செலுத்துகிறது. இவர்களுக்குச் சேவையாற்றும் பணியாளர்கள் இத்துறையில் விசேட பயிற்சி பெற்றவர்கள். இதனால் முழுமையாக இயங்க முடியாத முதியோரின் தேவைகள் கச்சிதமாக நிறைவேற்றப்படுகிறது. அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம்வரை கை ஓயாமல் பணி புரிகிறார்கள். கண்ணியமாகவும், பொறுப்பாகவும், பொறுமையாகவும், அன்போடும் முதியவர்களோடு நடந்து கொள்கிறார்கள். இப்பணியாளர்களுடன் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் அதற்கு முறைப்பாடு செய்வதற்கும் ஏற்பாடு உள்ளது.

தற்செயலாக பராமரிப்புப் பணியாளர் வரமுடியாதவிடத்து மற்றொருவரை முற்கூட்டியே தெரிவித்து சம்பந்தப்பட்ட சேவை நிறுவனம் அனுப்பி வைக்கிறது. இத்துடன் அரசாங்கத்தின் சேவைகள் நின்றுவிடுவதில்லை. இயலாமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான பலவித உபகரணங்களையும் வழங்கி வருகிறது. வீட்டின் கட்டுமானத்தில் கூட இவர்களின் தேவைக்கேற்ற மாற்றங்களைச் செய்வதற்கு மானியம் வழங்கப்படுகிறது. இவைகளுக்கு நன்றி கூற வார்த்தைகள் கிடையாது.

முதியோர்கள் எல்லோரும் கௌரவமாகவும், கண்ணியமாகவும் தாங்கள் வாழ்ந்த வீட்டிலேயே இறுதிக் காலம்வரை இருக்க வேண்டுமென விரும்புகிறார்கள். அக்காலம்வரை சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டுமென நினைக்கிறார்கள். சரியான இடத்தில் முதுமை அடைதல் என்ற ஒரு நிரலை அரசாங்கம் இப்போது ஆராயத் தொடங்கியுள்ளது. முதியோரை நீண்டகால பராமரிப்பு நிலையங்களில் அனுமதித்து பராமரிப்பதற்கு, வீட்டில் வைத்து மேலதிக சேவைகளை வழங்கி பராமதிப்பதிலும் பார்க்க அதிக நிதி தேவைப்படுகிறது.

அறுபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட முதியோரின் எண்ணிக்கை 2022ம் ஆண்டில் 2.8 மில்லியனாக இருந்தது. இது கனடிய மக்கள் தொகையில் 18.4 வீதம். 2046ல் இங்கு முதியோரின் எண்ணிக்கை 4.4 மில்லியனாகுமென எதிர்வு கூறப்படுகிறது. இது இந்நாட்டு மக்கள் தொகையில் 20.3 வீதமாகும். இவ்வாண்டுக்கு முதியோர் சேவைக்கு ஒன்றாறியோ அரசாங்கம் ஏழு மில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளது. முதியோருக்கான தேசிய நிலையம் கனடா முழு சுகாதார சேவைகள் நிதியிலிருந்து 2019ல் 18.5 வீதத்தையே நீண்டகால பராமரிப்பு சேவைகளுக்கு செலவழித்துள்ளது. ஆனால், நோர்வே நாடு 29.5 வீதத்தை செலவழித்துள்ளது.

அபிவிருத்தியடைந்த 36 நாடுகளை அட்டவணைப்படுத்தியபோது கனடா 12ம் இடத்தில் உள்ளது தெரிய வந்துள்ளது. முதியோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் வேகத்தைப் பார்க்கும் பொழுது முதியோர் சேவைகள் கனடிய அரசாங்கங்களுக்கு பெரும் சவாலாக அமையப் போகிறது.



இரா. சம்பந்தன்

கண்டுகொள்ளப்படாத கண்ணதாசன் பாடல்

கம்பன் நிலைத்து நிற்பதற்கு அவன் எடுத்துக் கொண்ட காவியப் பொருள் காரணமாயிற்று. பாரதியார் புகழ் பெறுவதற்கு அவரின் தேசபக்திப் பாடல்கள் காரணமாயிற்று. பாரதிதாசன் போற்றப்படுவதற்கு அவரின் தமிழ்ப் பற்றுக் காரணமாயிற்று. கலைஞர் நிலைத்திருக்க அவரின் அடுக்கு மொழி காரணமாயிற்று. அதுபோலக் கண்ணதாசன் நிலைத்து வாழ அர்த்தமுள்ள இந்து மதமும் யேசுகாவியமும் காரணமாயிற்று.

எல்லோராலும் விரும்பப்படும் எத்தனையோ திரைப்படப் பாடல்களைக் கண்ணதாசன் எழுதியிருக்கின்றார். அவரின் தத்துவப் பாடல்கள் ஆட்சி செய்யும் மனங்களும் ஏராளம். சோகப்பாடல்கள் காயப்படுத்திய மனங்களும் ஏராளம். காதல் பாடல்கள் புகுந்து கொண்ட மனங்களும் ஏராளம். கண்ணதாசன் பாடல்களை இந்தக் கண்ணோட்டத்திலேயே பார்த்துப் பழகிப் போன தமிழ்ச் சமுதாயம் அவரின் பாடல் ஒன்றை தலைமேல் போற்ற மறந்துவிட்டது.

அது 1968ம் ஆண்டு வெளியான உயிரா மானமா என்று ஒரு படம். மெல்லிசை மன்னர் எனப்படும் விஸ்வநாதன் இசையில் சீர்காழி கோவிந்தராஜனும் பின் உதவிக்கு ஈஸ்வரியும் இணைந்து பாடிய பாடல் ஒன்றை அந்தப் படத்துக்கு கண்ணதாசன் எழுதினார். தனது தேசபக்தி பாரதியாருக்கு சற்றும் குறைந்ததல்ல என்பதைக் கண்ணதாசன் நிறுவி விட்டுப் போன பாடல் அது.

அவரின் தேசபக்திக்கு சான்றாக பாரதவிலாஸ் போன்ற படங்களில் பாடல்கள் உண்டு. ஆனால் அவையெல்லாம் தனிப்பாடல்கள். மென்மையான காதல் உணர்வை வெளிப்படுத்த எழுதிய பாட்டிலே நாட்டுப்பற்றை உட்கார வைத்த கவிதை உத்திக்காக இந்தப் பாடலை இங்கே பேசவேண்டியிருக்கின்றது. பாடல் இதுதான்.

குற்றால மலையிலே குதித்து வந்த தமிழிலே
வற்றாத பேரழகே நீயாடு தென்றல்
வந்தாடும் அருவியிலே நீராடு

ஒரு சோவியத் யூனியன் பெண்ணும் தமிழ் இளைஞன் ஒருவனுக்குமான காதல் பாடல் இது. மணப்பெண் என்றால் சீதனம் வேண்டுமே. அந்தப்பெண் கொண்டுவந்த சீர்வரிசையைப் பற்றி கண்ணதாசன் விபரிக்கின்றார்.

நீங்கள் எமக்களித்த நெய்வேலி பெருமைக்கண்டு
நாங்கள் உமகளித்த நன்றியே
என்னை நானே உனக்களித்தேன் செல்வமே

இந்த வரிகள் மிகப்பெரிய செய்தியொன்றை எடுத்து விளக்குகின்றது. சோவியத் யூனியன் இந்தியாவுக்கு குறிப்பாகத் தமிழ் நாட்டுக்குச் செய்த உதவி நெய்வேலி அனல் மின் நிலையமாகும். இந்த நெய்வேலி அனல் மின் நிலையம் இந்தியாவின் தென்கிழக்கு பகுதியில் உள்ள கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது 1962ம் ஆண்டு தெற்காசியாவின் முதல் மற்றும் ஒரே பழுப்பு நிலக்கரி மின் நிலையமாக நிறுவப்பட்டது. இந்தோ - சோவியத் கூட்டு முயற்சியில் 600 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்டதாக முதலாம் அனல் மின் நிலையம் 9 அலகுகளுடன் உருவாக்கப்பட்டது.

அடுத்து தூத்துக்குடி துறைமுகத்துக்கு சோவியத் யூனியன் செய்த உதவியைக் கையில் எடுக்கிறார் கண்ணதாசன். அப்போது வரலாற்றுச் சிறப்புமிக்க தூத்துக்குடி துறைமுகத்தின் விரிவாக்க வேலைகளில் பணத்தைக் கொட்டிக் கொண்டிருந்தது சோவியத் யூனியன்.

வருங்காலத்தில் தூத்துக்குடி துறைமுகத்துக்கு மிகப்பெரிய கப்பல்கள் வரும். தமிழகத்தின் கடல் வாணிபம் பெருகும். செல்வம் தமிழ்நாட்டிலே குவியும் எங்கள் தமிழகமே பூந்தோட்டமாக மாறிவிடும். இவையெல்லாம் நீ கொண்டுவந்த சீதனமல்லவா என்று அந்தப் பெண்ணுக்கு மகிழ்வோடு சொல்கிறான் காதலன்.

தென்கோடி தூத்துக்குடி திருத்தும் துறைமுகத்தால்
பொன்கோடி குவிக்கும் எங்கள் தாயகமே
செல்வ பூந்தோட்டம் ஆகும் எங்கள் தமிழகமே

எங்கள் தமிழ் நாட்டுக்கு கேரளம் என்று ஒரு தங்கை இருக்கின்றாள். அங்கே அழகான நதிகள் இருக்கின்றன. அங்கே நீ வந்து தவழ்ந்து விளையாடினால் உனக்கு மகிழ்வு ஏற்படும் என்று இன்னொரு செய்தியையும் சொல்கிறான் அவன்.

தமிழ்மொழி கொண்ட நங்கை
தங்க நிறம் மின்னும் மங்கை
தவழும் கேரளத்து வெள்ளத்திலே
நீ தவழ்ந்தால் இனிமை வரும் உள்ளத்திலே

இந்த வரிகள் பாரதியாரின் கவிதையொன்றை எதிர்த்துப் போராடுகின்றன. சிந்துநதியின் மிசை நிலவினிலே சேரநன்நாட்டு இளம் பெண்களுடனே சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து தோணிகள் ஓட்டிவிளையாடி வருவோம் என்றார் பாரதியார். சிந்துவின் முதன்மையான நீர் ஆதாரம் திபெத்தில் உள்ளது திபெத்தில் தோன்றிய சிந்து ஆறு பின்னர் லடாக் மற்றும் பால்டிஸ்த் வழியாக வடமேற்குப் பகுதியில் காரகோரம் மலைக்கு தெற்கே கில்கித் நோக்கி செல்கிறது.

கண்ணதாசன் சொன்னார். நாம் அங்கேயெல்லாம் போய்த்தான் மகிழ்ச்சியைச் சம்பாதிக்க வேண்டும் என்பதில்லை. கேரளத்திலேயே அதை அனுபவிக்கலாம் வா என்கிறார் அவர்.

உலகம் சுற்றும் வாலிபன் படத்துக்கு வெளிநாட்டுப் பெண்ணுடன் காதல் பாட்டு எழுத வேண்டும் என்றபோது வாலியால் பைச்சைக்கிளி முத்துச்சரம் முல்லைக்கொடி யாரோ என்று தான் எழுத முடிந்தது. ஆனால் உயிரா மானமா என்ற படத்துக்கு சோவியத்யூனியன் பெண்ணோடு ஒரு காதல் பாட்டு எழுதுங்கள் என்று கே.எஸ். கோபாலகிருஸ்னன் கேட்டுக்கொண்ட போது இவ்வளவு விடயத்தையும் ஒரு காதல் பாடலிலே உள்ளடக்கி எழுதிக் கொடுத்தார் கண்ணதாசன்.

அவருடைய இந்திய தேச பக்தியும் தமிழ்நாட்டுப் பற்றும் சோவியத் யூனியன் மீது கொண்ட மரியாதை போன்றனவெல்லாம் நிறைந்து கிடக்கும் இந்தப் பாடலை வெறும் சினிமாப்பாடலாகவே எண்ணிக் கொண்டு தமிழ்ச்சமூகம் கடந்து போனது தான் மிகவும் கவலைக்குரிய ஒரு செய்தியாகும்.

Jaffna protesters tell the President: 'We want our land back'

A protest was organised in front of the Presidential Secretariat at Galle Face on the 15th of July by the people of Jaffna claiming that they had lost their lands due to the interference of the Sri Lankan government.

Rajkumar Rajeevkan, an activist who helps these protesting landowners from Valikamam, Jaffna who say their land was illegally occupied by the army, told the Daily Mirror:

"We are here to tell the president that these peoples' lands were illegally occupied a long time ago under the name of high security zones," Rajeevkan said, adding that though the war ended in 2009, thirty per cent of the occupied land still remains under occupation sixteen years later.

"People in Jaffna have a right to live in peace," Rajeevkan said further. Rajeevkan added that the right to land is a fundamental right of the people, though violated by the government. He added that those now in power have given hope and made promises to those dispossessed of their land in Jaffna during their electoral campaigns, but nothing concrete has been done so far.

Nine months have passed since the new government was elected. "These people have their own documents and want justice – they want their lands still occupied by the army given back to them," Rajeevkan added. He says Buddhist temples and other buildings have been constructed in these lands.

Rajeevkan and other activists say that the government is supporting these constructions, which are occupied by the army. They point out that people are struggling to protect their basic rights, voicing their rights and asking for their lands and justice.

"We have been protesting in Jaffna for about two and a half years," Rajeevkan said. "But there is no solution or response from the government." According to him, this question has been raised in parliament, but without any response.

"If this same issue was protested by Sinhala people, the result would have been quite different," he added.

Rajeevkan further said that though the Tamil people continue to protest, their voices are ignored. He puts this down to racism, and said that the government should respect Tamils' rights and give these protesters a proper response.

He pointed out the Tamils had only limited political power in Sri Lanka; therefore, their grievances are not always heard.

As the protesters were saying, "We want our land back. The Sinhala people say that we (Sinhalese and Tamils) are one. In that case, come and help us get our lands back."

A Pallai resident who lost his land said to the Daily Mirror: "I was born in Pallai. We were displaced in 1992 because of the war. The army occupied our lands and up to now we haven't got them back."

He said some of the land was released back to their owners earlier, but others are kept waiting. "We are now living in other peoples' lands, paying rent. But they promised us before the elections that our lands would be returned."

He also said that some of the occupied land has been used to extend the airport. "They are using our agricultural land, destroying our trees and crops. People who protested are victimised, and have to fight for their rights."

Will the government listen to their grievances and take necessary action?

(Courtesy: Ceylon Daily Mirror)

ட்ரம்பின் அமெரிக்காவில் புதிய 'கனடா வீதி'

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கனடா மீது தொடர்ச்சியாக அறிவித்து வரும் வரி காரணமாக இரு நாடுகளுக்குமிடையிலான உறவு இழுபறியில் செல்கிறது. இதனால் தற்போதைய கோடை விடுமுறையில் அமெரிக்கா செல்லும் கனடியர்களின் தொகை பெருமளவில் குறைந்துள்ளதாக அமெரிக்க வணிக நிறுவனங்கள் கவலை வெளியிட்டுள்ளன. இந்த நெருக்கடியான சூழலிலும் ஒரு புதுமையான நிகழ்வு இடம்பெற்றுள்ளது. அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களில் ஒன்றான Vermontலுள்ள வீதி ஒன்றுக்கு 'கனடா வீதி' (Canada Street) எனப் பெயர் சூட்டி அதற்கான பெயர்ப் பலகையும் நாட்டி மகிழ்ச்சிக் கொண்டாட்டம் நடத்தியுள்ளனர் அங்குள்ள மக்கள். வேர்மன்ற் மாநிலம் கியுபெக் மாகாணத்தின் வடக்கு எல்லையிலும் நியுயோர்க்கின் மேற்கு எல்லையிலும் நியுஹாம்சயரின் கிழக்கு எல்லையிலும் மசாசூற்சின் தெற்கு எல்லையிலும் அமைந்துள்ளது. கனடாவை ஐம்பத்தோராவது மாநிலமாக மாற்ற வேண்டுமென ட்ரம்ப் அறிவித்து வரும் வேளையில் அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களில் ஒன்று கனடா வீதியை திறந்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனடா மூர்த்தி

கண்டதை மீண்டும் சொல்லுகிறேன் - 25

வெளிநாடுவாழ் தமிழர்களிடம் கனடா குறித்து பெரும் பிரமிப்பு இருக்கிறது. 'தமிழ் கவுன்சிலர்', "தமிழ் எம்.பி.பி.", "தமிழ் எம்.பி.", "தமிழ் மந்திரி", "தமிழ் மரபுத் திங்கள்", "24மணிநேர தமிழ் ரேடியோ", "தமிழர் தெருவிழா", "இயல்விருது" "தமிழர் தகவல் விருது", "இனப்படுகொலை அங்கீகாரம்" "போர்க்குற்ற விசாரணை முன்னெடுப்பு", "தமிழ் சமூக மையம்" என இங்கு உருவெடுத்த பல்வேறு உற்சாக ஊற்றுக்கள் வெளிநாடுவாழ் புலம்பெயர் தமிழ்ச் சமூகங்களுக்கும் ஏதோ ஒருவகையில் உத்வேகம் தந்திருக்கின்றன.

இதனால்தானோ என்னவோ, இலங்கை, இந்தியா மற்றும் பிற வெளிநாடுகளில் வாழும் என் நண்பர்கள் கனடா குறித்துப் பேசும்போது பெரும் நம்பிக்கையுடன் பேசுகிறார்கள். கனடாவின் தமிழ்ச் சமூகச் செயல்பாட்டாளர்கள் மற்றைய புலம்பெயர் நாடுகளுக்கு "முன்னுதாரணமாகத் திகழ்வதுடன் எதிர்காலத்தில் தொடர்ந்தும் திகழப் போகிறார்கள்" என்றெல்லாம் நம்பிக்கையுடன் பாராட்டுவார்கள்.

அதேநேரத்தில், அவர்களுக்கு பிரமிப்புத் தரும் அந்த உற்சாக ஊற்றுக்களில் எதையாவது விமர்சித்து கனடாவிலிருந்தே கருத்துக்கள் தெரிவிக்கப்படும்போது அந்த விமர்சனங்களை ஏற்க மறுக்கிறார்கள் என்பதையும் சொல்லிவிட வேண்டியிருக்கிறது. (அதற்கொரு உதாரணம் - பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி குறித்து இந்தத் தொடரில் எழுதப்பட்ட கட்டுரை.) அவ்வகை விமர்சனங்களை "இழுத்து விழுத்தும் கனடா நண்டுகளின் வேலை" என அவர்களில் சிலர் கருதுவதுமுண்டு. அந்த அளவு நம்பிக்கை கனடாவில் பெருகி வாழும் ஈழத்தமிழர் சமூகத்தின்மீது அவர்களுக்கு இருக்கிறது.

அவர்களால் சிலாகிக்கப்படும் அளவிற்கு கனடாவைக் குறிவைத்துக் குடிவந்து நாம் இன்று இங்கு பெருகி சிறப்புற வாழ்வதற்கு என்னதான் காரணம்? கனடாவில் கிட்டிய சமூக உதவிக் கொடுப்பனவுகள், ஆரோக்கிய வதிவிடச் சூழல் என்பனவற்றுடன் ஆங்கிலமொழி என்பனதான் அதற்கான பிரதான காரணங்கள். அதற்குச் சமனாக கனடாவின் அரசியலமைப்பின் நெகிழ்வுத்தன்மை, அரசியல்வாதிகளின் மனோபாவம், அகதிகளை அரவணைக்கும் பண்பு என்பனவும் நமக்கு ஏற்ற வகையில் இருந்த காரணத்தால் ஈழத்தமிழர் எண்ணிக்கை இங்கு அதிகமாயிற்று.

கவனித்துப் பாருங்கள், ஆஸ்த்திரேலியா, ஜேர்மனி போன்ற நாடுகள் செய்வதுபோல, புதிய குடிவரவாளர்களைத் தரப்படுத்துவதைக் கனடா செய்வதில்லை. கனடிய அரசாங்கம் புதிய குடியேறிகளை வசதி குறைந்த நகரங்களுக்கு வலுக்கட்டாயமாக அனுப்பி நாடளாவிய அளவில் குடிவரவாளர் எண்ணிக்கையைப் பகிர்ந்து கொள்ளுவதில்லை. அதனால், ஒன்ராறியோவின் சில பகுதிகளில் நம்மவர் கணிசமாக குவிந்து, எண்ணிக்கையில் உயர்ந்து காணப்படுகின்றனர்.

இதன் விளைபொருளாக அப் பகுதிகளின் சில தொகுதிகளில் நமக்குக் கிட்டியிருக்கும் வாக்குப் பலம் மேலும் பற்பல அனுகூலங்களைத் தருகிறது. அத் தொகுதிகளுக்கான தேர்தல்கள் நடைபெறும்போது "வெற்றி பெறுவதற்கு ஒன்ராறியோ வாழ் தமிழர் வாக்குக்களை கூட்டாக மேலதிகமாகப் பெறுவது அவசியம்" எனக் கட்சிகள் நினைக்கின்றன. அதற்காக சமூகத்தின் அரசியல் அபிலாசைகளை அவர்கள் பகைத்துக் கொள்வதில்லை. "இனப்படுகொலை அங்கீகாரம்" "போர்க்குற்ற விசாரணை முன்னெடுப்பு", "தமிழ் சமூக மையம்" என பல்வேறு விடயங்களில் நம் சமூகத்தின்மீது கனடிய அரசியல் கட்சிகளிடமிருக்கும் கரிசனைக்கு நமது மக்களின் "எண்ணிக்கை"யே காரணமாகும். இதைத்தான் "ஈழத்தமிழரின் அரசியல் பலம்" என்று கருதுகிறோம். "நம் சமூகத்தின் அரசியல் வேலைகளால் அந்தப் பலம் கிட்டியதா" அல்லது "சமூகத்தின் அரசியல் சித்தாந்த அறிவால் பலம் கிட்டியதா?" என்ற சுவாரஸ்யமான இரண்டு கேள்விகளை எப்போதுமே நாம் கேட்பதில்லை. இப்போது வேறு இரண்டு கேள்விகளோடு விடயத்திற்கு வருவோம்.

"நம் மக்களின் எண்ணிக்கை (குவான்டிரி) தரும் வெற்றிகள் தரம் (குவாலிடி) என்ற வரைமுறைக்குள் அடங்கி வருகிறதா?" அல்லது, "சமூக மேம்பாடு, சமூகச் சிந்தனை உயர்வு என்பன பற்றி நாம் ஒரு ஆரோக்கியமான சமூகமாகச் சிந்தித்து இயங்குகிறோமோ?" இப்போதைக்கு அவற்றிற்கு இல்லையென்றே பதில் சொல்லத் தோன்றுகிறது. காரணம்? இங்கு பல சாதனைகள் நடந்திருப்பதாகச் சொல்லப்பட்டாலும் அவையெல்லாம் தனி நபர்கள் சார்ந்த உழைப்பின் விளைவுகள்தானே தவிர ஒட்டு மொத்த சமூக மேம்பாட்டு எண்ணப்பாடு தேவைப்படும் வளர்ச்சியை இன்னும் எட்டவில்லை என்றே மீண்டும் மீண்டும் சொல்லத் தோன்றுகிறது. இதைக் குறித்துதான் விபரமாக இத்தொடரில் அலச வேண்டும் என நினைக்கிறேன்.

இம்முறை உதாரணத்திற்காக சிலவற்றை மட்டும் சொல்லி இக்கட்டுரையை முடிக்கப் பார்க்கிறேன். "இயல் விருது" ரொறன்ரோவில் தரப்படுகிறது. அவ்விருது உலகளாவிய தமிழ் இலக்கிய உலகில் நமது பெருமிதமாகப் பார்க்கப்படுகிறது. ஆனால் வடை தேனீரோடு இங்கு நடைபெறும் புத்தக வெளியீட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தீர்களேயானால், "இலக்கிய வளர்ச்சி குறித்து ஒட்டு மொத்தச் தமிழ்ச் சமூகத்தின் நிலை எப்படி இருக்கிறது" என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதேபோல, தமிழ்நாட்டு திரைப்பட, தொலைக்காட்சி கலைஞர்கள் வருகைதரும் நிகழ்ச்சிகளில் குவியும் ஈழத்தமிழர் எண்ணிக்கையை வைத்துப் பார்த்தால் இங்கிருக்கும் தமிழ்ச் சமூகத்தின் பொழுதுபோக்குக்கலை வளர்ச்சியாவது பீறிட்டு உயர்ந்திருக்கவேண்டும். அப்படியில்லையே.. இப்படியாக, இலக்கியம், பத்திரிகை, சஞ்சிகை, அரங்கியல், தொலைக்காட்சி, வானொலி, சினிமா என இன்னும் பலவற்றினதும் தரத்திற்கும், மக்கள் ஆதரவு அளவிற்கும் நேர்த்தொடர்பு கிடையாது. இப்படியெல்லாம் அவைகுறித்து எதிர்மறையாகச் சிந்திப்பது நிர்கூலவாதம் அல்ல. ஆதங்கம்!

அந்தவகை ஆதங்கத்தால் ஏமாற்றமடைந்தவர்களாகி, "எல்லாச் சமூகத்திலும் இப்படித்தான் இருக்கிறது" என்று ஆறுதல்படுத்துபவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள். இவர்கள் செய்வதுதான் இன்னும் பெரிய தவறு. அது நம்மை நாமே ஒரு சமூகமாக ஏமாற்றுவதாகும். இந்தவகை ஆறுதல்படுத்தல் குறித்தும் பெருமளவு எதிர்க் கருத்துரைப்புத் தேவை.

இதனால்தானோ என்னவோ "கனடாத் தமிழர்கள் மற்றைய புலம்பெயர் நாடுகளிற்கு முன்னுதாரணமாகத் எதிர்காலத்தில் தொடர்ந்தும் திகழப் போகிறார்கள்" என்று வெளிநாட்டுத் தமிழர்கள் எப்போதாவது கருத்துரைக்கும்போது ஐயோ பாவம் என ஒருவகைப் பயம் ஏற்படுகிறது.

அ. முத்துலிங்கம்

சில்லறைக் கணக்கு

என் மனைவி சீட்டு கட்டமாட்டார். ஓர் உண்டியலில் சில்லறைகளைப் போட்டு சேமித்து, ஒரு நல்ல நாளில் உண்டியலை உடைத்து பணத்தை தர்மத்துக்கு கொடுத்துவிடுவார். இரண்டு வருடமாக அவர் சேமித்த உண்டியல் நிரம்பிவிட்டது. அதை உடைத்து சில்லறை-களை ஒரு சாக்குப் பையில் நிரப்பி என்னிடம் தந்து வங்கியில் போய் அதை பண ஓலையாக மாற்றிவரச் சொன்னார்.

வங்கியில் மூன்று யன்னல்கள் இருந்தன. ஒரு யன்னல் பெண், தன் யன்னலை மூடிவிட்டு குனிந்து ஏதோ அவசரமாகச் எழுதினார். இன்னொரு யன்னலில் சதுரமான மனிதர் ஒரு தொக்கையான மனுசியின் பணத்தை எண்ணிக்கொண்டிருந்தார். அந்தப் பணத்தை வங்கியில் போடுவதற்காக எண்ணுகிறாரா அல்லது மனுசியிடம் கொடுப்பதற்காக எண்ணுகிறாரா என்பது தெரியவில்லை. மூன்றாவது யன்னலில் ஓர் இளம்பெண் உயரமான சுழல் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவருடைய முழங்கைகள் ஈட்டிபோல கூர்மையாக இருந்தன. பயிற்சியில் இருப்பதாக மார்பிலே எழுதியி-ருந்தது. எந்த மார்பு என்று சொல்லவில்லை. நான் அவர் முன் சென்று நாணயக் குவியல் சாக்கை தொப்பென்று வைத்தேன். திடுக்கிட்டு "இது என்ன?" என்றார்.

"கனடிய நாணயங்கள்."
"இதை ஏன் இங்கே கொண்டுவந்தீர்கள்?"
"உங்களுக்கு மகிழ்ச்சியூட்டத்தான்."
"இதை நான் என்ன செய்வது?"
"என் வங்கிக் கணக்கில் இதை வரவு வைக்கவேண்டும்."
"இவ்வளவு காசையுமா?"
"இல்லை, மீதியை நாளை கொண்டு வருவேன்"

நான் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பெண்ணின் நாடி கீழே இறங்கி அவர் நெஞ்சிலே அணிந்திருந்த பவள மாலையை தொட்டது. கிலி பிடித்தவர்போல தன் உயரமான இருக்கையிலிருந்து சறுக்கி இறங்கி ஓடி தன் மேலாளரைக் கூட்டி வந்தார். அவரைப் பார்த்ததும் காரியம் சரியாகப் போகாது என்பது எனக்கு தெரிந்து-விட்டது. அவர் கால்களை தேய்த்து பின்னுக்கு வளைந்தபடி நடந்துவந்தார். வணக்கம் சொன்னால் நானும் சொல்வதற்கு தயாராகத்தான் இருந்தேன். அவர் சொல்லவில்லை. எனக்கும் ஒரு சொல் மிச்சப்பட்டது.

"எங்களுக்கு சில விதிகள் இருக்கின்றன. உங்களுக்கு தெரியும்தானே."
"அப்படியா?'
"நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும்."
"சொல்லுங்கள். உங்களுக்காக நான் என்னவும் செய்வேன். இடதுகைப் பழக்கக்காரனாக மாறு என்றால்கூட மாறுவேன்."

"அதெல்லாம் வேண்டாம். சில்லறைக் காசை உறைக-ளில் நிரப்பிக்கொண்டு வாருங்கள். வங்கி ஊழியர்களின் நேரம் முக்கியமானது."

வாடிக்கையாளர்களின் நேரம் முக்கியமானதில்லை என்று சொல்கிறார். நான் அப்படியே, அதே இடத்தில் என் வயதை கூட்டிக்கொண்டு நின்றேன்.

இதுதான் நான் மேலிடத்துக்கு எழுதிய கடிதம்.

மேன்மைதங்கிய ஐயா,

நான் உங்கள் வங்கியில் நீண்டகாலமாக கணக்கு வைத்திருக்கும் ஒரு சின்ன வாடிக்கையாளன். நான் நாளைக்கே என் வங்கி கணக்கை மூடினாலும் அது உங்களுக்கு தெரியப் போவதில்லை. அவ்வளவு சின்னக் கணக்கு. பத்திரிகைகளிலும், சுவர்களிலும் காட்சியளிக்கும் உங்கள் விளம்பரங்களை பார்க்கும்போது எனக்கு எல்லையில்லா மகிழ்ச்சி பொங்கும். "உங்கள் பணத்தை பாதுகாக்க 29,000 அர்ப்பணிப்பான ஊழியர்கள் உழைக்கிறார்கள்" என்று அந்த விளம்பரம் சொல்லும். இதைப் பார்க்கும்போதெல்லாம் என் மனம் புளகாங்கிதம் அடையும்.

என் மனைவி பாடுபட்டு உண்டியலில் சேமித்த பணத்தை ஏற்க வங்கிப் பெண் மறுத்துவிட்டார். மேலாளரும் என் உதவிக்கு வரவில்லை. 23 வருட-ங்களுக்கு முன்னர் வங்கி கணக்கு ஆரம்பித்தபோது இக்கட்டான விதி முறைகள் பற்றி ஒருவரும் என் அறிவை கூட்டவில்லை. நான் அப்பொழுது தான் நிலத்திலிருந்து கிளம்பி வந்ததுபோல இருவரும் என்னைப் பார்த்தார்கள்.

ஐயா, பல வருடங்களாக நான் வைத்திருக்கும் வங்கிக் கணக்கில் என்னுடைய சில்லறைக் காசை கட்டமுடியாவிட்டால் நான் வேறு எங்கே போய் இதை வரவு வைப்பது. சிலவேளைகளில் 29,000 அர்ப்பணிப்பான ஊழியர்கள் ஒரு வங்கியில் பணியாற்றுவதும் அவ்வளவு நல்லதுக்கல்ல.

தங்கள் உண்மையான, கீழ்ப்படிந்த சின்ன வாடிக்கையாளன்.

மேலே சொன்ன கடிதத்தை வங்கியின் தலைமைச் செயலகத்தின் தலைவருக்கு அனுப்பிவைத்தேன். கனடாவில் மூன்றாவது இடத்தில் இருக்கும் பெரிய வங்கி அது 1120 கிளைகள். சொத்து மதிப்பு 550 பில்லியன் டொலர்கள். இப்படியான பெரிய வங்கியிலிருந்து சின்ன வாடிக்கையாளனான நான் பதிலை எதிர்பார்ப்பது மடைத்தனம்.

அடுத்த நாள் காலை ஒரு தொலைபேசி வந்தது. தலைமை வங்கியின் செயலாளர் பேசினார், "உங்கள் கடிதம் கிடைத்தது. வங்கிக் கிளைக்கு உத்தரவு சென்றுவிட்டது. சில்லறைக்காசை அவர்கள் ஏற்றுக்கொள்வார்-கள். தலைவர் சார்பில் நான் மன்னிப்பு கேட்கிறேன்."

வங்கிக்கு மறுபடியும் நான் சில்லறைச் சாக்குடன் போனபோது அங்கே இரண்டு ஊழியர்கள் காத்திருந்தார்கள். ஒரு பெரிய மேசையில் சில்லறை-களைக் கொட்டி எண்ணினார்கள். எண்ண எண்ண அவை வளர்ந்து கொண்டே இருந்தன. ஒரு சதம், ஐந்து சதம், பத்து சதம், 25 சதம், ஒரு டொலர், இரண்டு டொலர் என்று கைகள் தேய எண்ணிக் களைத்துவிட்-டார்கள். ஒரு மணி நேரம் கழித்து, நான் கேட்டுக்கொண்டபடி அனாதை இல்லத்தின் பெயரில் ஒரு பண ஓலை தந்தார்கள்.

இந்தச் சம்பவத்தை என்னால் மறக்க முடியவில்லை. சுவரில் இருந்த படத்தை அகற்றிய பின்னரும் மங்கலான சதுரம் தெரிவதுபோல அந்த ஞாபகம் தங்கிவிட்டது. அதிகாரத்தில் உள்ளவர்கள் புது விதிகளை உண்டாக்கியபடியே இருப்பார்கள். வாடிக்கையாளர்கள் பணிந்துகொண்டே இருக்கவேண்டும். இனிமேல் நான் வங்கிப்பக்கம் போகமாட்டேன். செங்கல் நிறத்தில் பளபளப்பான புதிய உண்டியல் ஒன்று என் வீட்டில் வேலையை துவங்கிவிட்டது எனக்கு சிலநாள் கழித்துத்தான் தெரியவரும்.

முனைவர் பால. சிவகடாட்சம்

படித்ததும் கேட்டதும் - 85

செல்வம் வந்துற்றபோது

“அற்பனுக்குப் பவுசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்” என்பது பழமொழி. திடீர் பணக்காரர்களுக்கு என்றே சில குணாதிசயங்கள் உண்டு. அன்றாட வாழ்வில் உணவுக்கும் உடைக்கும் உறங்குவதற்கு ஓர் இடத்துக்கும் உதவக்கூடிய நிரந்தரமான வருவாய் இல்லாது தவிக்கும் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய நண்பர்களும் அவரது நிலையில் உள்ளவர்களாகவே பெரும்பாலும் இருக்க வாய்ப்புண்டு. கடினமான உழைப்பின் மூலமாகவோ எதிர்பாராமல் கிடைத்த செல்வம் காரணமாகவோ அவரது மதிப்பு சமுதாயத்தில் பெருமளவு உயர்ந்து விட்டால் அவரது போக்கு முற்றிலும் மாறிவிடலாம்.

செல்வமும் செல்வாக்கும் சேர்ந்தவுடன் பழைய நண்பர்களை மறந்துவிடக்கூடாது என்பதை வலியுறுத்துமுகமாகக் கூறப்படுவதே கிருஷ்ணன் போற்றிய குசேலரின் நட்பு பற்றிய கதை. கிருஷ்ணனின் பள்ளிப்பருவத்து இணைபிரியாத தோழன் குசேலன். இன்று அவன் பிள்ளைகுட்டிகளோடு அன்றாட உணவுக்கே அந்தரிக்கும் ஓர் ஏழைப் பிராமணன். இளமைக்கால நண்பனிடம் ஏதாவது உதவி கேட்டு வரும்படி அவனை ஓயாது நச்சரிக்கிறாள் குசேலனது மனைவி. ஒரு அவல் முடிச்சைக் கணவனிடம் கொடுத்து அவனை வழியனுப்பிவைக்கிறாள். ஏழை நண்பன் குசேலன் தயங்கித் தயங்கிக் கொண்டுவந்து கொடுத்த சாதாரண அவலை ஆசையோடு வாங்கி உண்கிறான் துவாரகை மன்னன் கிருஷ்ணன்.



எல்லோரும் கிருஷ்ண பரமாத்மாவாக இருந்துவிட முடியுமா? ஒருசிலருக்குத் தனது முந்தைய நிலையை நண்பர்களும் உறவுகளும் இன்னமும் நினைவில் வைத்திருப்பார்களோ என்னும் ஒரு பயம் இருந்துகொண்டே இருக்கும். தனது அன்றைய நிலையை எவரும் எண்ணிப் பார்த்துவிடக்கூடாது என்று முடிவெடுப்பர். அதற்காகவே அவர்கள் தம்மை முற்றிலும் மாற்றிக்கொள்வர். இந்தத் திடீர் பணக்காரர்களின் நிலை தடுமாற்றத்தைப் பாடி வைத்துள்ளார் ஒரு புலவர். பெயர் தெரியவில்லை. அவரது சொந்த அனுபவமாகவும் இருக்கலாம்.

செல்வம் வந்துற்ற போது தெய்வமும் சிறிதும் பேணார்

சொல்வதை அறிந்து சொல்லார் சுற்றமும் துணையும் பேணார்
வெல்வதே கருமம் அல்லால் வெம்பகை வலிதென்று எண்ணார்
வல்வினை விளைவும் பாரார் மண்ணின் மேல் வாழும் மாந்தர்

“செல்வம் வந்து சேரும்போது அதுகாலவரை வணங்கி வந்த தெய்வத்தைக்கூட மறந்துவிடுவார். எண்ணிப்பேசாது எடுத்தெறிந்து பேசுவார். சொந்தம் பந்தம் என்று பார்க்கமாட்டார். எதிலும் வெற்றி என்பதையே நோக்கமாகக் கொள்வார். எதிரி தன்னிலும் பலம் கூடியவன் என்பதை நினைத்தும் பார்க்கமாட்டார். தான் செய்யும் பாவங்கள் தன்னைப் பழிவாங்கும் என்பதையும் உணரமாட்டார்.”

A change in attitude of a sudden billionaire

There is a proverb that says, “If a poor man gets rich, he will hold an umbrella at midnight.” There are certain characteristics that are characteristic of suddenly rich people. A person who is struggling to find a steady income to help them with food, clothing, and a place to sleep in their daily lives is likely to have friends who are also in their situation. If his value in society increases significantly, either through hard work or unexpected wealth, his course may change completely.

The story of Kusela, Krishna’s inseparable schoolmate, is told to emphasize that old friends should not be forgotten, even after one attains wealth and power. While Krishna had become the king of a great kingdom, his childhood friend Kusela remained a poor Brahmin, struggling to make ends meet for his family. Urged repeatedly by his wife, Kusela reluctantly sets out to seek help from Krishna. When the two friends reunite after many years, the king of Dwaraka warmly welcomes Kusela and eagerly eats the simple food his friend had brought—offered with love and humility.

Can everyone become like Krishna Paramatma? On the contrary, some people fear that their friends and relatives will remember their former state of poverty. Determined to erase that past, they go to great lengths to completely reinvent themselves. A Tamil poet once captured the inner conflict faced by those who suddenly become wealthy. His name remains unknown—it is possible the poem reflects his own experience.

“Those who come into sudden wealth often

forget the deity they once devoutly worshipped.

Their words grow arrogant, spoken without thought or restraint.

Family bonds lose their value. Obsessed with victory in every pursuit,

they ignore the strength of their adversaries. Worst of all,

they remain blind to the fact that the sins they commit

may one day return to haunt them.”

கனடிய அரசியலில் நளபாகம்

ரூடோவின் 'கொத்து ரொட்டி'

கனடிய முன்னாள் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ என்றதும் இங்கு வாழும் தமிழர்களுக்கு முதலில் ஞாபகம் வருவதில் முக்கிய - மானது அவர் கொத்து ரொட்டி தயாரிப்பது. சில வருடங்களுக்கு முன்னர் ரொறன்ரோவில் நடைபெற்ற தமிழர் வீதி விழாவில் பங்குபற்றிய இவருக்கு கொத்து ரொட்டி உணவகத்தின் மீது பிரியம் ஏற்பட்டது. இதனால், உணவு தயாரிப்பவர்கள் அணியும் மேலாடையை அணிந்தவாறு கொத்து ரொட்டிகளை துண்டு - களாக்கும் இரண்டு வெட்டுக் கத்திகளை கையில் எடுத்து அசல் சமையல்காரராகவே பார்வையாளர்களின் கவனத்தை இவர் ஈர்ந்தார். எனினும், தமது பிரதமர் பதவியைக் காப்பாற்ற முடியாமல் போனதுடன் கட்சித் தலைவர் பதவியையும் இழந்தார்.

கார்னியின் 'பான் கேக்'

ரூடோவின் இடத்துக்கு கட்சியின் தலைவராகி புதிய பிரதம - ராகியிருப்பவர் அரசியல் அனுபவமற்றவர். கனடிய மத்திய வங்கியின் ஆளுனராகவிருந்த மார்க் கார்னி. கடந்த மாதம் இவர் கல்கேரியில் இடம்பெற்ற Stampede விழாவுக்கு விஜயம் செய்தபோது அங்கு பிரபல்யமான 'பான் கேக்' தயாரிக்கும் உணவகத்துக்குச் சென்றார். இலகுவாகத் தயாரிக்கப்படும் இந்தப் பலகாரத்தை பல தடவை முயன்றும் இவரால் சரியாகத் தயாரிக்க முடியவில்லை. இறுதியில் பான் கேக்கை தமது தலைக்கு மேலாக எறிந்து அதனை தமது கையிலிருந்த கரண்டியால் 'காட்ச்' பிடிக்க முனைந்து அதிலும் தோல்வி கண்டார். முடிவில் ஒருவகைச் சிரிப்போடு அங்கிருந்து வெளியே வந்தார்.

சமூக முன்னேற்றப் பணிகளுக்கு நிதி வழங்கிய சமூக வணிகரின் அறுபத்தைந்தாவது பிறந்தநாள்

இரண்டு சமூக முன்னேற்றப் பணிகளுக்கு நிதி வழங்கியதன் மூலம் முற்றிலும் வித்தியாசமான சமூக நிகழ்வாக பிறந்த நாள் வைபவம் ஒன்று அண்மையில் ஸ்காபரோவில் இடம் பெற்றது. அம்மா அடகு மாளிகையின் உரிமையாளரும், கனடா முன்னாள் இலங்கை வர்த்தகர் சங்கத்தின் ஆரம்ப கால தலைவருமான திரு. செல்லத்துரை கிருஷ்ணகோபா - லின் அறுபத்தைந்தாவது பிறந்தநாள் விழாவே சமூகப் பங்களிப்புக்கான ஒரு முன்மாதிரி நிகழ்வாக இடம்பெற்றது. கனடாவில் அமையவுள்ள தமிழ்ச் சமூக மையத்துக்கு பத்தாயிரம் டாலர்களையும், இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உருவாகும் வீடற்றோர் வீடமைப்புத் திட்டத்தில் ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்கான செலவாக ஐயாயிரம் டாலர்களையும் திரு. கிருஷ்ணகோபால் தமது பிறந்தநாள் நினைவாக கையளித்தார். வாழ்த்துரைகள், கலைநிகழ்வுகளோடு பெருமளவு நண்பர்களும் உறவினர்களும் இவ்வைபவத்தில் பங்குபற்றினர்.

(ஒளிப்படம்: ஐயா4U)

ப. ஸ்ரீஸ்கந்தன்

ஞாபகம் துளிர்க்கிறதே - 46

சித்துப்பாத்தி

"....அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நாளை பிற்பகல் நான்கு மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்...."

எனது அறிவிப்புக் கலைக்கு அடிகோலியது இந்த மரண அறிவித்தலே. அப்போது காரில் குழாய் கட்டி சந்திக்குச் சந்தி நின்று இந்த அறிவிப்பு நடக்கும். இப்போது தொலைபேசியில் பதிவு செய்து ஓட்டோவில் சென்று ஒலிபரப்புகிறார்கள். எனது ஊர் பெரிய பிரதேசமாக இருப்பதாலும், இறந்த அடுத்தநாளே எரிக்கின்ற வழக்கம் இருந்ததாலும் மக்களுக்கு உடனடியாக மரணச் செய்தியை சொல்லுகின்ற மார்க்கமாக இந்த அறிவிப்பு இருக்கிறது.

கமுகு மரம் வெட்டி பாடை செய்து, உடலம் ஊரவர்களால் சுமந்து செல்லப்படும். எல்லோரும் கூடவே நடந்து செல்வார்கள். இன்று அப்படியல்ல. உடலம் வாகனத்தில் செல்கிறது. ஊரவர் முன்னரே சென்று சுடலை மடத்தில் குந்தியிருக்கிறார்கள்.

வெடி கொளுத்தும் சிறுவர், கொள்ளிக்குடம் தீச்சட்டி சுமப்போர், நிலபாவாடை விரிப்போர், பூக்கள் மற்றும் சில்லறைக் காசு எறிவோர் என்று இறுதி ஊர்வலம் அமர்க்களமாக இருக்கும். முன்னால் தேவாரம் பாடிக்கொண்டு செல்லும் மணியத்தார் அரியாலை சந்தி வந்ததும் பட்டினத்தாரின் "ஒரு மடமாகும் ஒருவனுமாகி...." என்ற பாட்டை ஆரம்பிப்பார். பாடை சுடலைக்குள் செல்லவும், "கடுகி நடந்து சுடலையடைந்து...." என்று பாடவும் சரியாக இருக்கும்.

பின்னர் சில கிரியைகள் நடைபெற்று உடலம் எரியூட்டப்படும். ஒருவர் இறந்து எரிக்கப்படும்வரையான செயற்பாடுகளில் ஊரில் வாழும் பல்வேறு சமூகங்களின் பங்களிப்புகள் இருந்தன. இன்று அவை வழக்கொழிந்துவிட்டன.

மேலைத்தேய அரசுகளால் மதமாற்றம் செய்ய முடியாத பலமான இந்து மதத்தவர்களாக இருந்ததால் எமக்காக இந்து மயானம் மட்டுமே இருந்தது, இருக்கிறது. சித்துப்பாத்தி மயானம் இப்படி பெயர் பெறுமென்று யார்தான் நினைத்தார்கள். நாம் இந்துக்களாக இருப்பதால் உடலங்களை எரிப்பதே எமது வழமை. நாம் எவரையும் புதைப்பதில்லை.

கண்டி வீதியிலும், செம்மணி வீதியிலும் நின்று பார்த்தால் வடிவாகத் தெரியும் சித்துப்பாத்தி மயானம். இரண்டு ஏக்கர் பரப்பளவு கொண்டது. ஊரவர் ஒருவர் அன்பளிப்புச் செய்த காணி. அந்நாட்களில் அப்பகுதிகள் எங்கும் உப்பளங்கள் நிறைந்து இருந்ததால் 'பாத்தி' என்ற அடைமொழி வந்திருக்கலாமென்ற கருதுகோள் உண்டு.

ஊரவர்களைக் கொண்ட மயானசபை இந்த மயானத்தை நடத்தி வந்தாலும் இது நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கி வந்தது. இவ்வருட ஆரம்பத்தில் மயானத்தில் எரியூட்டும் மேடை கொண்ட கட்டிடம் கட்டுவதற்காக நல்லூர் பிரதேச சபை 55 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தது. அதற்கான பணிகளை ஆரம்பித்தபோதுதான் திடுக்கிடும் விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்தன.

இதனை மூடிமறைத்து கட்டிடத்தைக் கட்டுங்கள் என்று அழுத்தங்கள் வந்தபோதும் துணிச்சல் மிக்க மயான சபை உறுப்பினர் இருவர் பொலிசில் முறைப்பாட்டை பதிவு செய்தனர்.

90கள் எமக்கு நல்ல காலமாக இருக்கவில்லை. எமது சித்திவிநாயகர் ஆலய குருக்களின் மகன், பத்திரிகையாளர் சபாரட்ணத்தின் தாயார் உட்பட 18 ஊரவரை இந்திய இராணுவம் கொன்று குவித்த வலி ஆறமுன் இலங்கைப் படைகள் தமது அட்டூழியங்களை ஆரம்பித்திருந்தன.

எமது ஊரைச் சுற்றி கோட்டை, குருநகர், கைதடி ஆகிய இடங்களில் பெரியளவில் இராணுவ முகாம்கள் இருந்தன. இவை தவிர ஆங்காங்கே சிறிய அளவில் பொக்கற் முகாம்கள் இருந்தன. அவ்வாறான ஒன்று அரியாலையிலுள்ள நெடுங்குளம் வீதியில் இருந்தது. அந்த முகாம் எமது மக்கள் மீது அகோர தாண்டவத்தை நிகழ்த்தியது.

கட்டுமஸ்தான உடல்வாகு கொண்டோர், உயர்வகுப்பு பயிலும் மாணவர்கள் என்று எனது உறவுகள் பலர் காணாமல் போயினர். மேலும் பலர் வள்ளங்களில் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றனர். காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோர் பலர் மனம் பேதலித்து இறந்து போயினர். கிருஷாந்தி கொலைவழக்கில் சாட்சியம் அளித்த இராணுவச் சிப்பாய் சோமரத்னவின் கூற்றுப்படி பல பெண்கள் கூட்டுப் பலாத்காரத்துக்குள்ளாகி படுகொலை செய்யப்பட்டனர். சோமரத்னவின் கூற்றுப்படி செம்மணிப் பகுதியில் 600 உடல்கள் புதைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மின்சார சபையில் உயரதிகாரியாக கடமையாற்றிய ஊரவரான கணநாதனின் மகள் இராணுவ வண்டி மோதி மரணமானார். பரீட்சை முடிந்து தனது சிநேகிதியின் இறுதிச் சடங்கில் கலந்துவிட்டு வீடு திரும்பிய வேளையிலேயே கிருஷாந்தி மீதான பயங்கரம் நிகழ்ந்தது.

அரியாலை தமிழரசுக் கட்சியின் கோட்டையாக இருந்தது. சமூக சேவையாளரான கணநாதன் கட்சியின் விசுவாசியாக இருந்தார். கிருஷாந்தி கொலைவழக்கில் நீதி வேண்டி சில சில முயற்சிகளை மேற்கொண்டதால் இவரை ஈ.பி.டி.பி. சுட்டுக்கொன்றது. இன்று தமிழரசும் ஈ.பி.டி.பி.யும் ஒன்றாகிவிட்டன. உயிர்கள் பலியானதுதான் மிச்சம்.

கடந்த பல வருடங்களாக நான் ஊருக்குப் போய்வருகிறேன். அங்கு நிற்கும்போது நடக்கும் எம்மவரின் இறுதி ஊரிவலங்களில் தவறாது கலந்து கொள்கிறேன். அப்பாவை எரித்த இடத்தில் நிற்பது எனக்கு ஒருவகை மன ஆறுதலைத் தருகிறது.

"....உறவுகளே! என்னை மன்னித்து விடுங்கள். புதைக்கப்பட்ட உங்கள் உடல்கள் மீது நடந்து திரிந்ததற்காக என்னை மன்னித்து விடுங்கள்".

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திரு - விழா கடந்த மாதம் 29ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அதற்கு முன்னதாக கடந்த மாதம் 21ம் திகதி ஆலய கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. வள்ளியம்மை திருக்கல்யாண படிப்புடன் பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு காளாஞ்சி எடுத்துச் செல்லப்பட்டு பண்பாட்டு முறைப்படி பெருந்திருவிழா பத்திரிகையும் சேர்த்து கையளிக்கப்பட்டது. இந்த மாதம் 21ம் 22ம் திகதிகளில் முறையே தேர்த்திருவிழாவும் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கம் நினைவுச்சிலை பிரான்ஸ் ‘பொன்டி’யில்

தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் அர்ப்பணிப்பான தேசிய விடுதலைப் பங்களிப்புக்காக அவரது நினைவுச்சிலை பாரிஸின் புறநகர்களில் ஒன்றான பொன்டியின் (Bondy) அமைக்கப்படுகிறது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த மாதம் 12ம் திகதி இடம்பெற்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் போது அதற்குத் தலைமை தாங்கிய விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகராகவும், கொள்கை வகுப்பாளராகவும் செயற்பட்டவர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம். ராஜதந்திர ரீதியாக இயங்கிய இவர் சமாதான பேச்சுவார்த்தைக் காலத்தில் பல்வேறு வெளிநாடுகளுக்கும் சென்று தமிழர் தரப்புக்கு தலைமை தாங்கியவர். இதனால் சர்வதேச அரங்கில் தமிழீழ தேசத்தின் குரலாக இவர் ஒலித்து வந்தார். பொன்டி நகரிலுள்ள பூங்காவான Parc de La Marca La Vauvey; சிலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. பொன்டி நகர முதல்வர் (மேயர்) ஸ்டீபன் ஏர்வே உட்பட நகரசபை உறுப்பினர்களும் இந்நிகழ்வில் பங்குபற்றினர். பிரான்சை தளமாகக் கொண்டியங்கும் தமிழ்ப் பண்பாட்டு வலயம் மற்றும் கார்த்திகை 27 சங்கம் ஆகியவை இணைந்து இதற்கான முன்னெடுப்பை மேற்கொண்டதாக செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. **(தகவல்: எஸ்.கே. ராஜென்)**

MedCentre Health
Expanded Medical Centre
புதிய இடத்தில் விரிவுபடுத்தப்பட்ட சேவைகளுடன்

டாக்டர் செந்தில் மோகனின் நிர்வாகத்திலான MedCentre Health (Expanded Medical Centre) ஸ்காபரோ மார்க்கம் வீதி - பிஞ்ச் வீதி சந்திக்கருகிலுள்ள 2225 மார்க்கம் வீதி கட்டிடத்துக்கு விரிவுபடுத்தப்பட்ட சேவையாக இடம் மாறியுள்ளது. இதன் திறப்பு விழா கடந்த மாதம் 18ம் திகதி இடம்பெற்றது. புதிய மருத்துவசேவை பிரிவை செல்வன் நீலன் செந்தில் மோகன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். புதிய இடத்தில் இணைந்துள்ள மருந்தகத்தை (பார்மஸி) ஒன்றாறியோ அரசின் சுகாதார இணையமைச்சர் விஜய் தணிகாசலம் திறந்து வைத்தார். MedCentre Urgent Care, MedCentre Women's Health, MedCentre Pharmacy ஆகிய மூன்றும் தற்போதைய விரிவுபடுத்தப்பட்ட சேவையில் இணைந்துள்ளன.

Medcentre Health

Synchronizing Health Sectors

IMPORTANT ANNOUNCEMENT

WE'VE MOVED & EXPANDED!

Now serving you at our new location:

2225 Markham Road, Ground Floor
(Markham Road & Finch Ave. Intersection)
Scarborough, ON, M1B 2W4

Thank you for your continued trust.
We look forward to welcoming you to our new and expanded clinic!

ONE LOCATION. COMPLETE CARE.

- **Medcentre Urgent Care**
  (Walk-In Clinic & Urgent Care Centre – since 2014)
- **Medcentre Women's Health Care**
  (Women's Health Care Clinic – since 2022)
- Now Introducing:
  Medcentre Pharmacy (Urgent Care Pharmacy)

Medcentre Pharmacy was launched to support integrated care in response to patient demand.

வானிலை
கணிக்கக்கூடியது
ஆனால்
உங்கள் எதிர்காலம்
அப்படியல்ல
எங்கள் நோக்கம்
உங்கள்
எதிர்காலத்தை
பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE
CRITICAL ILLNESS
DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE
SUPER VISAS
RRSP & RESP
WE TRULY CARE FOR YOU & YOUR LOVED ONES!
647 401 5800
ajithinsurance.ca
ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4

EENC.ca Employment and Education Network Canada Inc.

Scarborough READERS' CHOICE 2021 GOLD WINNER

TORONTO STAR READERS' CHOICE 2022 DIAMOND WINNER

TORONTO STAR READERS' CHOICE 2023 DIAMOND WINNER

TORONTO STAR READERS' CHOICE 2024 DIAMOND WINNER

FREE WORKSHOPS

(We are not a school)

Pre-Study MS-Office Workshops

If you are planning to attend a class at a school remotely, this workshop may help you. These in-person classes are FREE and open to the public.

Post-Study Boot Camps

While remote learning offers convenience, we have noticed that many graduates are struggling to succeed interviews. As a solution, we have created a half-day, in-person workshops for graduates to review subjects in preparation for the jobs they are applying for. These workshops are free for EENC clients

7 STEP - JOB Search Workshops

Step 1: Resume Workshop **Step 2:** One-on-One Resume building Session **Step 3:** Finalizing Resume **Step 4:** Interview Techniques workshop **Step 5:** One-on-One Interview Preparation **Step 6:** Mock Interview **Step 7:** Referrals to Employers. *(Please note: Jobs are not guaranteed by EENC or our staff , these work shops are only availabe to EENC clients).*

JOB FAIR

SCAN ME>>

- Dashi Karen 647-339-3362 *(English, Tamil)*
- Rupa Mothey 647-501-3362 *(English, Hindi, Nepali, Arabic)*
- Luckshi Mahesan 647-720-2115 *(English, Tamil)*
- Neha Bangar 416-268-1987 *(English, Hindi, Punjabi)*
- Usha Sukumar 437-288-6070 *(English, Tamil)*
- Maria Bernardo 647-448-0818 *(English, Tagalog, Visayan)*
- Sudip Mukherjee 647-501-3362 *(English, Hindi, Bengali, Nepali)*
- Jasli P. Thankachan 647-965-3362 *(English, Malayalam, Arabic)*

Employers, if you are looking to hire the right staff, please contact careers@eenc.ca.

Our service is free.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation • Funeral & Memorial Service
• Reception • Burial • Cremation

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

Vilosanan Sivatharman
Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

A caring part of our community

Srisakthi Jewellery

3551 Markham Road, Suite 151
Toronto, ON. M1X 0A6
(Markham & Steels - Red Building)
Srisakthijewellery1@gmail.com
B: 416 755 0559 C: 416 625 6677

TVS CARGO

AIR & SEA CARGO, WORLDWIDE COURIER
416-291-3232
info@tvscargo.com
www.tvscargo.com
3351 Markham Rd, Unit 113
Scarborough, ON M1X 0A6

A1 Studio At GTA Square

Rudy Ruthran

GTA Square, 5215 Finch Ave East,
#103, Toronto, M1S 0C2.
rudyruthran@gmail.com
Tel: 416-587-5583

NATHAN SRITHARAN
Barrister & Solicitor, Notary Public

305 Milner Ave.
Suite #309
Toronto, Ontario
M1B 3V4
(Milner / Markham)

Tel: 416-499-2760
Fax: 416-499-6534
E-mail: sritharan@nathanlaw.ca

JRB GROUP CORPORATION

Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling

Best rate Mortgage Arranged

Almost All Services Available

Business Loans 25K to 500,00
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!

FINANCE

R. R. Rajkumar B. Com (Hons), MBA
647–289–6164 / 416–655–5577

வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

Even if the accident is your fault:

Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist

WE ARE HERE TO HELP YOU

இலவச ஆலோசனைகளுக்கு:

தீபன்

24 Hours Direct Line

(416) 831-4444
(416) 505-9804

2190 Warden Ave., Suite 202, Toronto, ON M1T 1V6

KEV TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
www.kevtax.com
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING & ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH REASONABLE FEES
* FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
FREE EFILE SERVICE
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866
FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com

JUST LISTED!
5225 Finch Ave E 205, Toronto, ON
Middlefield & Finch
$499,000
Suitable for First time Homebuyers or Downsizers
Newly Renovated Washrooms & Kitchen
Close to Temples, Malls, Banks & All Amenities etc.
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
Homelife/Future Realty Inc.
HomeLife/Future Realty Inc., Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977

Financial Services
42 YEARS IN BUSINESS
KASI
THIRU
M. KASIPPILLAI & SONS INC.
3228 Eglinton Ave. E., Suite #3, Scarborough, Ont. M1J 2H6
Tel.: (416) 267-8221 Fax: (416) 267-0620

ABBIRAMI
CATERING AND TAKE OUT SERVICE
அபிராமியின்
வாழையிலை
விருந்து
Tel: (416) 266-5372
2619 Eglinton Ave. East,
Scarborough, Ont M1K 2S2
(Between Brimly & Midland)

பந்தல்
சேவை
Special Event
Tents Service
416-606-5284

Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

சிவஸ்ரீ
சிவ. ஜனார்த்தன
குருக்கள்
647-449-6542
aarthananyathu@gmail.com
aarthanan@hotmail.com

KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197

8 Shadlock St Unit #6,
Markham, ON L3S 3K9
Tel : 416-321-7552
INDRAN SWEET
& Ice Cream

பா. பாரதிமுத்துநாயகம் - இந்தியா

மறம் பிழைத்திலாத திரிசரன் எனும் மாவீரன்

மூக்கறுபட்ட சூர்ப்பநகை இராமனும் இலக்குவனும் தனக்கிழைத்த அவமானத்தை எண்ணித் துடித்தாள், துவண்டாள். மின்னல் விளைவித்த பெருந்தீயில் அகப்பட்ட நாகப்பாம்பைப் போல புரண்டாள்!

“முழங்கு மேகம் முடித்த வெந்தீயினால்
புழுங்கு நாகம் எனப் புரண்டாள்” என்பார் கம்பர். தம்பி கரனிடம் ஓடினாள்!

வலிய படைத்தலைவர் பதினான்கு அரக்கர்களை அனுப்பி வைத்தான் கரன். அவர்கள் அனைவரையும் தூசியைத் துடைத்தெறிவது போல துடைத்தெறிந்தான் இராமன். பதினான்கு படைகளை அனுப்பினான் கரன்.

“ஆறினோடு ஆறாயிரம் அமைந்த ஆயிரம்
கூறு இனம் ஒரு படை”

அதாவது படையினரின் மொத்த எண்ணிக்கை 8,4000000. எட்டு கோடியே நாற்பது இலட்சம்! 6000× 1000× 4 = 8,4000000.

எண்ணிக்கையைக் கண்டு மயங்க வேண்டாம். இவையெல்லாம் ஷகவியுரைத்த கற்பனை’ என்று நகர்வோம்.

தாடகையைக் கொன்ற இராமன், பின்னர் விராடனையும் வதைத்தான். பரசுராமரை வெற்றி கொண்டான். ஆனால் பெருஞ்சேனையை எதிர்கொள்வது இதுவே முதல் முறை.

பதினான்கு சேனைகளையும் படைத்தலைவர்களையும் வெற்றி கண்ட இராமனைச் சந்திக்க சினங்கொண்டு வருகிறான் திரிசரன்.

பேராற்றல் மிக்க திரிசரன் மூன்று தலைகளையுடையவன் என்பதால் இந்தப் பெயர். கரனுக்கு இளைய தம்பி.

திரிசரன் “தூவிய சரமெல்லாம் துணிய வெங்கணை ஏவினன்’ இராமனும். திரிசரனுடைய கணைகளை-யெல்லாம் தனது வில்லாற்றலால் அறுபடும்படிச் செய்தது மட்டுமல்லாமல், அவனது உயிர் போன்ற தேரோட்டியையும் கொன்று வீழ்த்தினான் தசரதன் மைந்தன்.

அடுத்து திரிசரனுடைய மூன்று தலைகளில் ஒன்றை மட்டும் விட்டுவிட்டு இரண்டு தலைகளை தரையில் உருட்டினான் சீதையின் கணவன்.

“.........மகுட மாத்தலை
ஒன்று ஒழித்து இரண்டையும் உருட்டினான் அரோ”

தனது பெயருக்குக் காரணமாக அமைந்திருந்த மூன்று தலைகளில் இரண்டை இழந்தும் கூட ஆற்றலை இழக்காமல் தொடர்ந்து அம்புகளை இராமன் மீது ஏவினான் திரிசரன்!

“திரிசரா எனும் பேர் அழிந்ததனினும் மறம்
பிழைத்திலன்”

என்று கம்பரே வியந்து கூறுவதைக் கவனித்து நாமும் வியந்து நிற்கிறோம்.

திரிசரன் என்ற பாத்திரம் கம்பராமாயணத்தில் வருவதும் போவதும் சில பாடல்கள்தான். சிறிய பாத்திரமேயானாலும் அவன் வீரத்தை மெச்சுமிடங்கள் ஒரு சிலவேயாயினும் சிந்தையில் தைத்து நிற்கிறது.

ஆவேசத்துடன் அப்படி அவன் ஏவிய கணைகளை எதிர்கொண்ட கோசலைமைந்தன், திரிசரனது கார்மேகம் எனும் வில்லினையும் எவராலும் தடுக்க முடியாத தனது கோதண்டத்தால் அறுத்து மாற்றினான்.

தேரையிழந்து, இருதலைகளை இழந்து, வில்லையும் இழந்த திரிசரன் அந்த நிலையிலும் தனது போர்க்குணத்தை இழந்தானில்லை.

காப்பியத் தலைவன் ஒப்பற்ற வீரத்தையும் அருங்குணங்களையும் கொண்டவனாகப் படைக்கப்படுவது இயல்புதான்.

ஆனால் அப்படிப்பட்ட ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவனை எதிர்த்து நிற்பவனாகிய திரிசரனுடைய நோக்கம் எதுவானாலும் ஆகட்டும்! இங்கே அதுபற்றிப் பேசத் தேவையில்லை.



அவன் உயிரினும் மேலாகப் போற்றியது அரக்கர் குல மானத்தையே என்பது கம்பருடைய கவிதையால் தெளிவாகிறது.

முந்தைய பாட்டில் திரிசரனை, ஷமறம் பிழைத்திலன்’ என்பார் கம்பர். அதாவது, தனது வீரத்தைக் கைவிட்டு விடவில்லை என்பது பொருள்.

ஷமறம்’ என்பது உயிரை வாங்கவோ அல்லது உயிரைக் கொடுக்கவோ அஞ்சாத தன்மை என்பார் நாமக்கல் கவிஞர்.

மேலும் ஷமானம்’ ஆண்மைக்குத் தகாத காரியங்களைச் செய்துவிடக் கூடாதென்ற நாணுடைமை என்றும் விளக்குவார்.

இவ்விரண்டு பண்புகளாலும் களத்தில் பொலிகின்றான் திரிசரன்.
“வில் இழந்தனன் என்னினும் விழித்த ஆண் முகத்தின்
எல் இழந்திலன் இழந்திலன் வெங்கதம் இடிக்கும்
சொல் இழந்திலன் தோள்வலி இழந்திலன் சொரியும்
கல் இழந்திலன் இழந்திலன் கறங்கு எனத் திரிதல்.”

வில்லையிழந்தாலும் ஆண்மை விளங்கும் முகத்திலுள்ள ஒளியைக் கொஞ்சமேனும் இழக்கவில்லை.

சினங்கொண்டு பேசும் வார்த்தைகளை இழக்கவில்லை.
தோள்களின் வலிமையை இழக்கவில்லை.
மலைகளைப் பிடுங்கி எறியும் வலிமையை இழக்கவில்லை.

காற்றாடியைப் போலச் சுழன்று சுழன்று அவன் களத்தில் இயங்கும் வேகத்தை இழக்கவில்லை!
என்னவொரு வீரப்பாட்டு!

இத்தனை முக்கியத்துவத்தைக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஒரு சிறிய பாத்திரத்துக்குத் தந்து எதற்காகச் சிறப்பித்தார் என்றால்...
“வீரரை யாரே வியவாதார்?” என்று அவர் மொழியிலேயே விடையளிக்கத்தான் முடிகிறது!

கலைமுகம் -2

பிரிட்டனில் வாழ்ந்துவரும் ‘ஈழக்கூத்தன்’ ஏ.சி.தாசீசியஸ் அரங்கியல், எழுத்தியல், ஊடக வியல் பேராளுமை. அரங்கியலில் (Dramatics) நாடகத் தயாரிப்பு, நெறியாழ்கை, நடிப்பு என்றும், எழுத்தியலில் (Literature) நாடகங்கள், கலை, அரசியல் கட்டுரை ஆக்கங்கள் எனவும், ஊடகவியலில் (Media) (வானொலி, தொலைக் காட்சி) சமூக - கலாசார - அரசியல் ஆய்வுகள் என்பனவற்றில் மிகப்பெரும் வல்லுனராய் நம்மத்தியில் வாழ்பவர். ஈழத்துக்கலைவானில் பிரகாசித்த கலைவல்லாளர்கள் வரிசையில், வரலாறாக நிலைபெற்றிருப் - பவர் நாடகர்-ஏடகர்-ஊடகர் ஏ.சி. தாசீசியஸ். ஈழநாட்டின் நாடகக்கலை வேர்களைத் தேடி ஆய்வுகள் மேற்கொண்டு அரங்கேற்றி, ஈழத்து நாடகக்கலை காத்திரமாக ஆழ வேரூன்றுவதற்குரிய பணியில் பெரும் பங்கு வகித்து வரலாறு படைத்தவர்.

எஸ்.கே. ராஜென் - மூத்த ஒலிபரப்பாளர்

தமிழ் - சிங்கள அரங்கை சிலிர்க்க வைத்த ஈழக்கூத்தன்

பல்கலைக்கழகக் கற்கைக்காலம். ‘அக்குவைனஸ்’ பல்கலைக்கழகத்தில் மேலைத்தேச நாடகக் கலையைக் கற்றுவந்த காலகட்டத்தில், தமிழ் நாடகத்துறையில் ஆர்வம் கொண்டு பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களுடைய நாடகக் கற்கைக்கூடத்துக்குச் சென்றவேளை “இப்போது இங்கே வராதீர் அங்கேயே நில்லும்” என்றார்.

ஆச்சரியம் அடைந்த தாசீசியஸ் அவர்கள், அவரது ஆசான் அடுத்துக்கூறிய வார்த்தைகளால் ஆனந்தமடைந்தார்.

“ஆங்கில நாடகக்கலையைக் கற்கும் ஒரே தமிழர் நீர் என்பதால் அதனைக் கற்றுத்தேறும், பின்னர் தமிழ் நாடகம் செய்யலாம்” என்றார். ஆசானின் வார்த்தை - களுக்கு மதிப்பளித்த தாசீசியஸ் அவர்கள் ஆங்கில நாடகக் கலையை தொடர்ந்து கற்றுத்தேறி, நவீன தமிழ் நாடகத்துறையின் மூலவர் ஆனார்.

தாசீசியஸ் அவர்கள் நாடகப்பணி பற்றி பேராசிரியர் க.சிவத்தம்பி அவர்கள்: “தாசீசியஸின் பணி, பின்நோக்கிப்பார்க்கும்பொழுது சமாந்தர முக்கியத்துவம் உடையது. தாளையடியைப் பிறப்பிடமாகக் கொண்ட தாசீசியஸ் நாடகக் கூத்து மரபுக்கூடாகவே வந்தவர். பேராதனைப பல்கலைக்கழகத்தில் 1960களில் முக்கியத்துவம் பெற்ற ஆங்கில நாடக இயக்கத்தில் முக்கியமான இடத்தைப் பெற்றவர். பின்னர் 1960களின் பிற்பகுதியிலும் 1970களிலும் இலங்கையிலே காணப்பெற்ற நாடகக்கலை ஈடுபாட்டு முயற்சிகளின் - போது தமிழ்ப்பாரம்பரியக் கூத்து மரபின் நாடக வலுவையும் அதன் ஆழத்தையும் புத்துருவாக்க முறையில் (Innovative) எடுத்துக்காட்டி தமிழ் சிங்கள அரங்கை சிலிர்க்க வைத்தவர்.

‘பொறுத்தது போதும்’ நாடகத்தில் நின்ற இடம் அசை - யாமலே நித்திரைகொண்டு எழும்புவது போலவும், இன்னொரு நாடகத்தில் நின்றுகொண்டிருந்த ‘வெளி’ - க்கப்பால் ஓர் அங்குலம் கூட வெளியே போகாமல் ஒரு ஓட்டப்பந்தயத்தைச் சித்தரித்த பொழுதும் சமகால நாடக உலகு மாத்திரமல்லாமல் நாடகத்துறையின் புத்தாக்க வல்லுநர்கள் என்று போற்றப்பட்ட சிங்கள தமிழ் நாடக இயக்குநர்களையும் வியக்கவைத்தவர்” எனப் பதிவிட்டுள்ளார்.

இவரது இன்னொரு சமகாலக் கலைஞர், பேராசிரியர் மௌனகுரு தனது எழுத்தில் தாசீசியஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ”விமர்சகர்களால் தாக்கப்பட்டு ஒடுக்கப்பட்டவன் நான். பிற்காலத்தில் அவர்கள் அதை உணரும் நேரத்தில் நான் அங்கிருந்து புறப்பட்டு லண்டனுக்கு வந்துவிட்டேன். ஈழத்தைப் பொறுத்தவரை நான் புதைக்கப்பட்டவன்’ என மனம் மிக வருந்தி, அர்ப்பணம் மிக்க ஒரு மாபெரும் கலைஞன் கூறும் வார்த்தைகள் இவை. அப்படியன்று. தாசீசியஸின் நாடக பாணி இங்கு தொடர்கிறது. அவரிடம் பயின்றோர் அதனை முன்னெடுக்கின்றனர்.

பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் நாடகம், அரங்கியலை ஒரு பாடமாகப் படிக்கும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தாசீசியஸையும் அவர் நாடகப் பணிகளையும் நன்கு அறிந்துள்ளனர். பல்கலைக் கழகங்களில் தாசீசியஸ் பற்றி, அவர் நாடகப்பணிகள் பற்றி அவரது நாடக ஆக்கங்கள் பற்றி ஆய்வுகள் நடைபெறு - கின்றன. அவை பெரும் கட்டுரை வடிவிலும் வந்துள்ளன. தாசீசியஸ் கூறுவது போல அவர் இங்கு புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டி - ருக்கிறார். விதையிலிருந்து விருட்சங்கள் எழும்.”

ஈழத்து நாடக உலகில் ஈழக்கூத்தன் தாசீசியஸ் அவர்கள் வாழ்கிறார், வாழ்வார் என்பதற்கு இந்தப் பெருந்தகைகளின் கூற்றுகள் போதுமானவை.

நாடக அரங்கக்கல்லூரியில் இவருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தி பயிற்சியில் கலந்து கொண்ட கலைப்பெருந்தகைகள் கலைப் - பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, சிசு.நாகேந்திரம், மாமனிதர் அரசையா அவர்கள் வரிசையில் அன்று பலர் அணி திரண்டனர்.

ஈழத்து நாடகக்கலை மூலவர் கலையரசு சொர்ணலிங்கம், நடிகமணி வி.வி.வைரமுத்து வழி வந்த நாடகக் கலையின் தொடர்ச்சியா - ளரான தாசீசியஸ், தமிழ் நாடகப்பயணத்தில் அரும்பெரும் கலைஞர் ஞானம் லம்பேட் அவர்களின் கலையுறவு தமக்குக்கிடைத்த பெரும் வரப்பிரசாதம் என்பார்.

ஈழத்து நாடக உலகின் சாதனைக் கலைஞன், சரித்திர நாயகன் லடீஸ் வீரமணி அவர்கள் பற்றி தாசீசியஸ் அவர்கள் கூறும் விதமே தனிச்சுகம் தரும். இந்த ஒப்பற்ற கலைஞனைப் பலர் மறந்துவிட்டார்கள். ஆனால், லடீஸ் வீரமணி என்ற நாடகனைப் பற்றியும், இலங்கை நாடக மேடையேற்றங்களில் கூடிப்பணியாற்றிய மாபெரும் நாடக நெறியாளர் சுஹைர் ஹமீது அவர்களின் கலை உறவின் ஆழத்தையும், ஈழக்கூத்தின் வேர்களைத்தேடிச்சென்று, அங்கே பெற்றுக்கொண்டவைகளைக் கனதியாகப் பதிவு செய்து, பின்னர் அவற்றை வானொலியில் ஒலிபரப்பி நேயர்களும், ஆக்கங்கள் வழங்கிய கலைஞர்களும் கேட்டுமகிழ்ந்திட வைத்த வானொலி நாடகத் தயாரிப்பு வல்லாளர் கே.எம்.வாசகர் அவர்கள் அளித்த உதவி, ஒத்துழைப்புத் தொடர்பான கதைகளையும் ஆனந்தமாக இப்பொழுதும் தாசீசியஸ் அவர்கள் கூறிவருகிறார்.

இலங்கை வானொலிக் கலைக்கூடத்தில் நாடகக்கலையை படைத்த அனுபவம், இவர் இலண்டன் மாநகரில் புகலிடம் பெற்ற வேளை, பிபிசி தமிழோசை கரம் நீட்டி வரவேற்றது.

ஒரு தசாப்த காலம் தமிழோசையில் பணி செய்தார். அங்கே ஒலிபரப்பாளர் சங்கர் அவர்களுடனான உறவு வளர்ந்தது. இப்பொழுதும் வானொலி பற்றிப் பேசும் வேளை - களில் அவர் உச்சரிக்க மறக்காத ஒருவர் சங்கரண்ணா என்ற மாபெரும் ஒலிபரப் - பாளர் சங்கர். சங்கரண்ணா என்று தாசீசியஸ் அவர்கள் கூறும் பொழுது நாதஸ்வரம் தவில் இசை அவர் குரலில் ஒலிக்கும்.

பிபிசி தமிழோசை வானொலிப்பணி நிறைவடையும் காலத்தில், உலகெங்கும் வாழும்

(30ம் பக்கம் வருக)

நாடோடி மன்னன் செங்கிஸ்கான்...

(08ம் பக்கத்திலிருந்து)

முதன்மை 'ககானாக' 1206ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். உலக வரலாற்றில் மிகப்பெரிய தாக்கம் மிக்க ஆட்சி அமைப் - பாளராக விளங்கிய அவர் ஒரு கடுமையான போராளியும், திறமையான அரசியல்வாதியும், புதுமையான ஆட்சிக் கொள்கை களின் முன்னோடியும் ஆவார். தனது படைத் திறனாலும், யுத்தத் தந்திரங்களாலும் உலக வரலாற்றின் பாதையை மாற்றியவர் அவர்.

எதிரிகளின் பலவீனங்களை ஆராய்ந்து அதற்கேற்ற யுத்தத் திட்டங்களை அவர் உருவாக்கினார். சீனா, மத்திய ஆசியா, கிழக்கு ஐரோப்பாவின் பல பகுதிகளைப் படை கொண்டு வென்று மிகப்பெரிய பேரரசை நிறுவினார். அவரது படைகள் ஆப்கானிஸ்தான், அரேபியா, தெற்கு ரஷ்யா, கொரியா, உஸ்பெக், தஜிகிஸ்தான், துர்கிஸ்தான், கச்சஸ், ஆர்மேனியா, ஜியார்ஜியா, குவைத் போன்ற பல பகுதிகளையும் கைப்பற்றின.

அவரது ஆட்சியில் திறமை, விசுவாசம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மரபு அடிப்படையிலான 'சாதிப்பார்வையை' மறுத்தார். அவர் திறமையானவர்களை உயர் நிலைக்கு நியமித்து, சமுதாயத்தில் சமநிலை மற்றும் வாய்ப்புகளை உருவாக்கினார். மேலும், 'யாசா' என்ற சட்டக் குறியீட்டை அறிமுகப்படுத்தி, ஒழுங்கும், கட்டுப்பாடும், விசுவாசமும் அடிப்படையாகக் கொண்ட சட்டங்களை நடைமுறைப்படுத்தினார்.

செங்கிஸ்கான் தனது பேரரசில் பல்வேறு மதங்கள் மற்றும் கலா - சாரங்களை ஏற்றுக்கொண்டார். போரில் தோல்வி கண்டு, அவரது படையினரால் கைப்பற்றப்பட்ட மக்கள் தங்கள் மதங்களையும் பாரம்பரியங்களையும் தொடர அனுமதித்தார். இதனால் பேரரசில் அமைதியும் ஒருங்கிணைப்பும் நிலவின.

'யாம்' என்ற விரைவான அஞ்சல் மற்றும் வர்த்தக அமைப்பை உருவாக்கி, பேரரசின் பரப்பளவில் தகவல் மற்றும் பொருட்களின் பரிமாற்றத்தை விருத்தி செய்தார். இதனால் பட்டுப்பாதை வழியாக வர்த்தகம் மற்றும் கலாசார பரிமாற்றம் பெரிதும் வளர்ந்தது, இது உலக வரலாற்றில் புதிய பரிமாணங்களை உருவாக்கியது.

செங்கிஸ்கானின் பேரரசு உலகின் மிகப்பெரிய தொடர்ச்சியான பேரரசாக இருந்தது. அவரது ஆட்சிக் கொள்கைகள் மற்றும் படைத்திறன், வர்த்தகம் மற்றும் கலாசார பரிமாற்றம் ஆகியவை உலக வரலாற்றின் பல்வேறு பகுதிகளில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தின.

செங்கிஸ்கான் ஒரு கடுமையான போராளி என்றாலும், அவர் உலக வரலாற்றை மாற்றியமைத்த புதுமையான ஆட்சியாளரா - கவும் இருந்தார். அவரது படைத்திறன், ஆட்சிக் கொள்கைகள், மத பொறுமை மற்றும் வர்த்தக வளர்ச்சி ஆகியவை புகழப்பட வேண்டிய விடயங்கள். உலக வரலாற்றின் பல்வேறு பண்புகளை இணைத்து, புதிய உலகத்தை உருவாக்கியவர் என்ற வகையில் நாம் சந்தித்த மொங்கோலிய மக்கள் அனைவரும் செங்கிஸ்கான் பெயரைச் சொன்னதும் பெருமை - யுடனும் அவருக்கான மரியாதை - யையும் உடனே செலுத்துவார்கள்.

செங்கிஸ்கானின் மரணம்கூட மர்மத்தால். சியாவுக்கு (ஓயை) எதிரான போர் நடவடிக்கைகளில் அவர் கொல்லப்பட்டதாகவும், நோய் வந்து மரணித்ததாகவும், குதிரையிலிருந்து கீழே விழுந்தோ வேட்டையாடும் போதோ அல்லது போரிடும் போது ஏற்பட்ட காயம் காரணமாக இறந்தார் என்றும் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. தன் இறப்பிற்குப் பிறகு எதிரி நாடுகள் மொங்கோலியர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தலாம் என்று செங்கிஸ்கானுக்குத் தெரிந்திருந்தது என்றும் அதன் காரணமாக, அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட நாடுகளுக்கு மொங்கோலியப் படைகள் செல்லும் வரை தான் இறந்த விடயத்தை வெளியில் கூறக்கூடாது என்று அவர் சொல்லியிருக்கிறார்.

அவரது மரணத்திற்குச் சில வருடங்களுக்கு முன்னர், தனது இனத்தின் பழக்க வழக்கங்களின்படி, அடையாளமிடப்படாத கல்லறையில் தன்னை அடக்கம் செய்யுமாறு அவர் கேட்டிருக்கிறார். அவரைப் புதைத்தவர்களும் இரகசியத்தைக் காப்பாற்ற தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டதாக

கூறப்படுகிறது. அவர் எங்கே இருக்கிறார் என்பது இன்றுவரை யாருக்கும் தெரியாது. ஆனால் அவரது பெயர் வாழ்கிறது.

மொங்கோலிய மக்கள் அவரை ஒரு வெற்றியாளராக மட்டுமல்ல, மக்களை ஒன்றிணைத்து கலாசாரங்களுக்கிடையே பாலங்களைக் கட்டிய ஒரு தொலைநோக்காளராகவும் போற்றுகிறார்கள். எங்கள் பயணத்தின் ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு 'கெர்'இலும், ஒவ்வொரு முகத்திலும், நாங்கள் அலைந்து திரிந்த அதே நிலங்களில் ஒரு காலத்தில் சவாரி செய்த ஒரு மனிதனின் எதிரொலிகளை நான் கண்டேன் - செங்கிஸ்கான், நாடுகள் பல வென்ற ஒரு நாடோடி மன்னர்.



தமிழ் - சிங்கள அரங்கை சிலிர்க்க..

(28ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களுக்கென ஒரு தனித்துவமான வானொலியின் தேவை பற்றிய சிந்தனை பிபிசி கலைக்கூடத்திலேயே கருக்கொண்டது.

தளபதி கிட்டு அவர்களின் வேண்டுதலும் ஆலோசனைகளும் உள்ளத்தில் நிலைபெற அனைத்துலக ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தமிழ் 'ஐபிசி தமிழ்' உலகத்தமிழ் உறவுகளுக்காக செய்மதி (Satellite),), மத்தியலை (M.W), சிற்றலை (S.W), வலைத்தளம் (Internet) என ஒலிபரப்புக்குரிய தளங்கள் யாவற்றின் வழியாகவும் ஒலித்தது.

எம் தேசத்தை ஆண்டவர் நாட்டிலிருந்து பொங்குதமிழ் என எழுந்து எம் நிலம் வாழ் நேச உறவுகளின் நெஞ்சங்களில் வீற்றிருந்து வீறு நடை போட 09.06.1997 அன்று ஆரம்ப ஒலி எழுப்பியது. இலண்டன் வொக்ஸோல் டபிள்யூ.ஆர்.என் (World Radio Network) தலைமையகத்தில், ஐபிசி தமிழ் கலையகம் அமைந்திருந்தது.

உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் நெஞ்சம் நிறைந்தது. நிறைவான தமிழ், தரமான நிகழ்ச்சிகள், கவிதை நிகழ்ச்சிகள், விவாத அரங்கங்கள், சிறுவர் நிகழ்ச்சிகள் (வணக்கம் ஐபிசி மாமா - மாமி) நேரடிச்செவ்விகள், தாயகச்செய்திகள், உலகச்செய்திகள், ஆய்வுகள், அலசல் என யாவும் ஐபிசி தமிழ் வானொலி வழியாக மக்கள் உள்ளங்களை நிறைக்க அதன் நிறுவனராகத் திகழ்ந்தவர் தாசீசியஸ்.

பிரிட்டன் தமிழர் உட்பட ஐரோப்பிய தமிழர் யாவரையும் 'வணக்கம்' கூற வைத்து வானொலி தனது தமிழ்ப்பணியை மேற்கொண்டது.

'எம்தமிழ் உறவுகளே' என்ற சொல்லாடலை வானொலித்தமிழாகத் தாசீசியஸ் அவர்கள் தந்தார். அதுமட்டுமல்ல 'துயர் பகிர்வோம்' என்ற சொல்லாடலும் இவர் தந்ததே.

எப்பொழுதும் எல்லா விடயங்களிலும் தாசீசியஸ் அவர்களுடன் கூடவே பயணிக்கும் யாழ்.மத்திய கல்லூரியில் ஆறுமாதகால ஆசிரியப்பணியை தாசீசியஸ் அவர்கள் மேற்கொண்ட வேளையில் மாணவராக ஆரம்பித்த உறவு, புலம் பெயர் வாழ்விலும் தொடர்கிறது. அந்த அன்பு உறவுக்காரரான தொலைத்தொடர்பு நிபுணர்-பொறியியலாளர் ஞானரட்ணசிங்கம் அவர்களைத் தலைவராகத் திகழ வைத்தார். நிர்வாக ஆலோசகராக ஈசன் சடாச்சரம்(கோபு), தொழில்நுட்ப உதவியாளராக மதி, விக்கி திருநாவுக்கரசு இணை இயக்குநர், சுந்தரம் சிறிஸ்கந்தராஜா முகாமையாளர் எனப்பொறுப்பு வகிக்க, செல்லத்துரை நாவரசன், உங்களில் ஒருவன் லோகேஸ், போல் சுகி (சுகி சிவேந்திரா), கலா புவனேந்திரன், சிவரூபன், ஜி.எஸ். குமார், யசோதா மித்திரதாஸ், போல் பிரகலாதன், தர்சி ஞானரட்ணசிங்கம், சுமதி சுரேசன், மருத்துவர் என்.எஸ்.மூர்த்தி, மருத்துவர் சசிகலா இராஜமனோகரன், கந்தையா இராஜமனோகரன், அமலன், அமலசுதன், அருணா இராமச்சந்திரன், இரவி அருணாசலம், கணேஸ் தேவராஜா, ஜெயக்குமார், கலா விக்னராஜா, அன்ரனி சத்தியசீலன், பரா பிரபா, கே.வி.நந்தன், எஸ். ஈஸ்வரதாசன் என நிகழ்ச்சித்தயாரிப்பளர்களையும், அறிவிப்பாளர்களையும் திரட்டி ஐபிசி தமிழ் ஒலி ஊடகத்தை செப்பனிட்டுச்செயற்படுத்தி வந்தார். இந்த கலைக்கோவிலில் வானொலிக்கலை படைக்க அடியேனுக்கும் ஓர் இடம் வழங்கினார்.

அதுவே இன்றும் நின்று நிலைபெறுகிறது. நிறுவனத்தின் நிதித்துறையாளராகவும் அனைவருக்கும் ஓர் அன்னையாகவும் திகழ்ந்து அறிவிப்பாளர்கள்,கலைஞர்கள் அனைவரின் அன்புக்குரியவராக அஞ்சலா தாசீசியஸ் விளங்கினார்.

இலங்கையின் தலைசிறந்த திரைப்பட இயக்குநர், சர்வதேச விருதுகள் பெற்ற லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களிடம் பெற்ற திரைப்படத்துறைப்பயிற்சி, 'கொலு கதவத்த' படத்தயாரிப்பு, 'நிதானய' திரைப்பட எடிட்டிங்கில் பெற்ற பயிற்சி என்பவை பிரான்ஸிலிருந்து இயங்கிவந்த ரி.ரி.என் தொலைக்காட்சியின் இயக்குநராகப் பணியாற்றிய காலத்தில் பல்வேறு விடயங்களைத் திட்டமிட இவருக்கு உதவியது.

காலத்தின் கண்ணாடியாக வாழும் ஓர் உண்மைக்கலைஞன் தாசீசியஸ் அவர்களால் உலகத் தமிழினம் பெருமை கொள்கிறது.

Real estate excellence, every time.

Rajmogan Selliah
Sales Representative

Direct: 416 569 3200

Email: srajmogan@gmail.com

Buy | Sell | Lease | Invest

210 - 80 Corporate Drive,
Toronto, ON M1H 3G5

Office: 416 284 5555

Residential, Commercial and Investment Properties

ALL YOUR
CATERING
NEEDS
CALL 416 - NANTHA 1 ext. 1
416 - 626-8421 ext. 1
FEEL GOOD
Taste Together
நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
INDIAN / CEYLON
TAMIL RESTAURANT IN GTA
Kipling & Steeles
(416-NANTHA-1 Ext. 2)
#18 - 5010 Steeles Ave W Etobicoke,
ON M9V 5C6
Warden & Finch
(416-NANTHA-1 Ext. 3)
Bridlewood Mall #106 - 2900 Warden Ave,
Scarborough, ON M1W 2S8
Middlefield & Steeles
(416-NANTHA-1 Ext. 4)
#2 - 2002 MiddleField Rd
Markham, ON L3S 1Y5
(Beside Fresh Food City Super Store)
(416-NANTHA-1 Ext. 5)
#8 - 2200 Brock Rd,
Pickering, ON L1X 2R2
Food Court - 6, Majestic City
(416-NANTHA-1 Ext. 6)
2900 Markham Rd, Scarborough, ON M1X 1E6
416 - NANTHA 1 | 416 - 626-8421
www.nantha.com



Build Your Dream Home
SABESAN'S CHOICE
We build 10,000sq. feet (minimum) warehouse from 139.00 per sq.feet.
400 Kilometre per hour Wind resistance.
Termite Proof
Compare traditional Building Energy Savings.
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன் இணைந்ததாக மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா?
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் !
Sabesan
விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

416 321 6420

- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள் இல்லங்களை மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Dr. Shan A. Shanmugavadivel & Associates

டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில்
பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

MONDAY - FRIDAY

(416) 266-5161

(Near Kennedy Subway - Rainbow Village Building)

RAINBOW VILLAGE DENTAL OFFICE

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB

டாக்டர் எம்.கே. முருகானந்தன்

ஒஸ்டியோபொரோசிஸ்

இடுப்பு எலும்பு முறிவு (Hip Fracture) என்பது ஒரு பாரதூரமான பிரச்சனை. இது பொதுவாக வயதானவர்களிடையேதான் அதிகம் காணப்படுகிறது.

பொதுவாக 65 வயது முதல் 80 வயது வரையானவர்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

அதிலும் பெண்கள் பாதிப்படைவது அதிகம். விழுகைகளே அத்தகைய எலும்பு உடைவுகளுக்கு பெரும்பாலும் காரணமாகிறன.

இடுப்பு எலும்பு உடைவு எனப் பொதுவாகச் சொன்னாலும் உண்மையில் உடைவது தொடை எலும்பின் மேற்பகுதிதான். இடுப்பு மூட்டுப் பகுதிக்குள் இருக்கும் எலும்பின் பகுதியே அதிகம் உடைவதுண்டு.

முதியவர்களில் இது அதிகம் வருவதற்குக் காரணம் அவர்களது எலும்புகள் நலிவடைந்திருப்பதே. அவ்வாறு எலும்பு நலிவடைவதை ஒஸ்டியோபொரோசிஸ் (osteoporosis) என்பார்கள்.

பலவிதமான மருந்துகளை உட்கொள்வதால் ஏற்படும் பக்க விளைவுகள், முதுமையின் பார்வைக் குறைபாடு, அவர்கள் சமநிலையைப் பேணுவதில் படும் சிரமம் ஆகியனவே அவர்களது விழுகைகளுக்கு காரணமாகின்றன.

கடுமையான வலி ஏற்படுவதும் அவர்களது நடமாட்டத்தை மட்டுப்படுத்துவதுமே இடுப்பு எலும்பு முறிவின் முக்கிய பாதிப்புகளாகும். எத்தகைய அறிகுறிகள் இருந்தால் நீங்கள் அதை இடுப்பு எலும்பு உடைவு எனச் சந்தேகப்பட முடியும். இடுப்பு பகுதியில் வீக்கமும் கண்டலும் தோன்றலாம். இடுப்பின் அந்தப் பகுதியால் உங்கள் உடற் பாரத்தை சுமக்க முடியாததால் எழுந்து நிற்க முடியாது போய்விடும்.

நடக்க முடியாது போகும் இடுப்பில் மட்டுமின்றி அந்தப் பக்க காலிலும் வலி பரவலாம். ஒருங்கே வைத்துப் பார்த்தால் அந்தக் கால் மற்றக் காலை விடக் கட்டையானது போலத் தோற்றமிளிக்கும்.

உடைவினால் படுக்கையில் கிடக்க நேர்ந்தால் படுக்கைப் புண்கள் ஏற்பட வாய்ப்புண்டு. சிறுநீர்த் தொற்று நோய், நியூமோனியா போன்ற பிரச்சனைகள் தொடரலாம்.

மிக ஆபத்தானது குருதி நாளங்களில் இரத்தம் கட்டிபடுவது. பெரும்பாலும் சத்திரசிகிச்சையே தேவைப்படும் என்பதால் விழுந்து விடாமல் தங்களைப் பாதுகாக்க முதியவர்கள் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

எமது உடலில் கொழுப்பு உள்ளது. உடலின் எடை அதிகரிப்பிற்கு இந்தக் கொழுப்பு மிக முக்கிய காரணமாகிறது. எடை அதிகரிப்புக்கு முக்கிய காரணமான கொழுப்பானது எமது சருமத்தின் கீழ் இருக்கிறது.அதே போல எமது வயிற்றறையிலும் இருக்கிறது. வயிற்றறையில் இருக்கும் கொழுப்பு, தசைகளுக்கும் கிழே உள்ளுறுப்புகளுடன் சேர்ந்திருக்கும்போதே வயிறு அதிகம் பருமனாகிறது. தொந்தி விழுகிறது. ஆபத்து மிக அதிகமாகிறது.

அதீத எடையானது பல ஆபத்தான நோய்களுக்குக் காரணமாகிறது என்பதை அறிவீர்கள். அதீத எடை என்பது உடற் திணிவுக் குறியீடு (BMI-30) 30ற்கு மேல் என மதிப்பிடுகிறார்கள்.

பணச் செழிப்பும் உணவு அதிகம் நிறைந்ததுமான அமெரிக்காவில் மட்டும் 72 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் அவ்வாறான அதீத எடை கொண்டவர்களாகும்.

அதிக எடையுள்ள பெண்கள் மெலிந்த பெண்களைவிட குறைந்தளவே எலும்புத் தேய்வுக்கு ஆளாவதாக அறியப்படுள்ளது. இது பற்றி இப்பொழுது மேலும் நுணுக்கமான ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளது. அதீத எடை கொண்ட பெண்களில் கொழுப்பானது வயிற்றறையில் இருந்தால் அவர்களது எலும்புகளின் அடர்த்தி குறைவாக இருப்பதுடன் எலும்பிலும் கொழுப்பு அதிகம் இருப்பது கண்டறியப்பட்டது.

இது காலகதியில் இடுப்பு எலும்பு முறிவு, முள்ளதண்டு எலும்புகளில் உடைவு ஆகியவற்றைக் கொண்டு வரும். அதாவது கொழுப்பு சருமத்தின் கீழ் இருப்பதை விட வயிற்றறையில் இருந்தால் பாதிப்பு அதிகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

முள்ளத்தண்டு எலும்பு உடைவு மற்றும் சிதைவு காரணமாக முதுகுவலி, கால்வலி, குனிந்து வேலை செய்ய முடியாமை எனப் பல தொல்லைகளுக்கு ஆளாவோர் எண்ணிக்கை பற்றிய தரவுகள் இங்கு கிடையாது. ஆனால் இதில் பெரும்பாலானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வயிற்றறைக் கொழுப்பு அதாவது தொந்தி வண்டியானது எலும்புப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் இருதய நோய்கள், நீரிழிவு ஆகியன ஏற்படுவதற்கும் மிக முக்கிய காரணங்களாகும். அதனால்தான் பல மருத்துவர்கள் பிரஸர், கொலஸ்டரோல், நீரிழிவு, எடை ஆகியவற்றை அளவிடுவதுடன் வயிற்றை பார்ப்பதுதான் ஒரே வழி. சுற்றளைவையும் அளந்து பார்க்கிறார்கள்.

நாங்கள் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். எங்களுக்கு இருக்க வேண்டிய அளவுகளாவன:

ஆண்களுக்கு 90 செமி அல்லது 35.4 அங்குலங்கள் குறைவாக.
பெண்களுக்கு 80 செமி அல்லது 31.5 அங்குலங்கள் குறைவாக.

வயிற்றில் கொழுப்பு அதிகரிப்பதற்குக் காரணங்கள் என்ன? பொதுவான எடை அதிகரிப்பிற்குக் காரணமான அதே தவறான உணவுமுறைகளும், போதிய உடற் பயிற்ச்சி இல்லாததுமே ஆகும். ஆனால் அத்துடன் பரம்பரைக் காரணங்களும் உள்ளன.

ஆரோக்கியமான உணவுமுறைகளுடன் தினசரி உடல் உழைப்பு அல்லது பயிற்சி மூலம் உங்கள் எடையையும் முக்கியமாக வயிற்றில் கொழுப்பையும் குறைத்து உடல் நலத்தை அக்கறையுடன் பேணவேண்டும்.

இரத்தத்தில் கொழுப்பு என்பது முற்றிலும் வேறு விடயம். அது கொலஸ்டரோல் பற்றியது. அதீத எடையுள்ளவர்களுக்கு அது வருவதற்கான வாய்ப்பு அதிகமாயினும் மெலிந்த எடை உடையவர்களுக்கு வராது என்று சொல்ல முடியாது.

OIL CHANGE SPECIAL $34.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
MY MECHANIC
இப்போது இரண்டு இடங்களில்!
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high, with your thoughts
PRO MAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
33 Fieldside Drive, Scarborough ON M1V 2C4

ISSN 1206-0585